# ஆசிரியர் வழிகாட்டி

# இஸ்லாம்

(2026 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கானது)

## தரம் 1

முன் பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk
அச்சிடுதல் மற்றும் விநியோகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# ஆசிரியர் வழிகாட்டி

# இஸ்லாம்

## தரம் - 1

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

அச்சிடுதல் மற்றும் விநியோகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

இஸ்லாம்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் 01

முதற் பதிப்பு : 2026

© தேசிய கல்வி நிறுவகம்
வெளியீடு : தேசிய கல்வி நிறுவகம்
ISBN:

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

## பணிப்பாளர் நாயகம் வழங்கும் செய்தி

இலங்கைப் பொதுக்கல்வியின் இத்தகைய மறுசீரமைப்பு ஒவ்வொரு கற்போனதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான செம்மையான பாதையை இலக்காகக் கொண்டுள்ளது.

தேர்ச்சி மையக் கற்றல், பரந்துபட்ட சிந்தனை, ஆக்கபூர்வமான ஆற்றுகை, இருபத்தொன்றாம் நூற்றாண்டுக்குரிய ஆற்றல்கள், ஆழ்ந்த தொழினுட்ப அறிவு, நல்லொழுக்கம் கொண்ட நற்பிரசை போன்ற பல்வேறு குணநலன்களில் அவதானம் செலுத்துவதற்கு ஏதுவானவகையில் கலைத்திட்டச் செயலொழுங்கில் நவீனமயமாக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் முறைமை மற்றும் கணிப்பீட்டுமுறை ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

கல்வியியலாளர்கள், துறைசார்கல்வி அறிஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்வகைப்பட்ட பங்குதாரர்கள் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட கலந்துரையாடலின் அடிப்படையில் தேசிய கல்வி நிறுவகத்தால் 2026 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 1 மற்றும் 6ஆம் தரங்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட இக்கலைத்திட்டம் மற்றும் அதற்குரிய கற்றல் சாதனங்களின் பண்புத் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக விசேட ஆர்வத்துடன் செயலாற்றிய கௌரவ கல்வி அமைச்சர், கல்விச் செயலாளர், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள், பாடப் பொறுப்பதிகாரிகள், பரீட்சை ஆணையாளர் நாயகம் மற்றும் அவரது ஆளணியினர், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் மற்றும் அவரது ஆளணியினர் ஆகியோர் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது.

அத்துடன், இவ்விடயத்தில் விசேட அர்ப்பணிப்புடன் செயலாற்றிய தேசிய கல்வி நிறுவகத்தின் நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஈடுபாட்டுடன் செயற்பட்ட கல்வி அலுவல்கள் சபை அங்கத்தவர்கள் அனைவரையும் மனப்பூர்வமாக நன்றியுடன் நினைவு கூருகின்றேன். இதனை வெற்றிகரமாக சாத்தியப்படுத்துவதற்கு முன்னின்று அயராது உழைத்த தேசிய கல்வி நிறுவகத்தின் அனைத்து ஆளணியினருக்கும் தேசத்தின் கௌரவம் உரித்தாக வேண்டுமென நம்புகின்றேன்.

பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரன
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

எமது நாட்டின் சகல பாடசாலைகளின் கலைத்திட்டத்திற்கான இனங்காணப்பட்ட இலகுவான கற்றல் துறைகள் காலததிற்கு காலம் மாற்றமுறும் நாட்டின், உலகின் பேண்தகு அபிவிருத்தியின் சவால்களை வெற்றிக் கொள்வதற்கும் நாட்டு மக்களிடம் காணக்கூடிய இயலுமையையும் மேலெலச் செய்கின்றது. கற்றல் - கற்பித்தல் செயன் முறையை நவீன காலத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்துவதுடன் புதிய பாடங்கள் கலைத்திட்டத்தினுள் அறிமுகம் படுத்தப்படுகின்றது. அத்துடன் மாற்றங்களுக்கமைய கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளும் காலத்திற்கு ஏற்ப அபிவிருத்தி அடையும். அதற்கேற்ப 2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் புதிய கல்விச் சீர்த்திருத்த கலைத்திட்டத்திற்கு அமைவாக ஒவ்வொரு பாடத்திற்கும் கற்றல் சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

2026ஆம் ஆண்டில் தரம் 1, 2027 ஆம் ஆண்டில் தரம் 2, 2028 அம் ஆண்டு தரம் 3, 2029 ஆம் தரம் 04 மற்றும் 2030 தரம் 05 ஆகிய ஆரம்பபிரிவு தரங்களுக்கு புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்படும். ஆரம்ப கல்வித்துறை மாணவர்களுக்கான செயல்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு அவசியமான வழிகாட்டல்களை ஆசிரியர் வழங்குவார். மேலும் ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள் ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் பாடம் தொடர்பான அறிவைப் பெறுவதோடு பெற்ற அறிவினை ஏற்ற சந்தர்ப்பத்தில் பிரயோகிப்பதற்கான திறன் விருத்திக்கு இக்கலைத்திட்டம் உதவியாக அமையும் என்பது எமது நம்பிக்கையாகும். 21 ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான ஆற்றல் மேம்பாட்டுக்கும் அதனூடாக மாணவர் ஆளுமை விருத்திக்கும் இங்கு அறிமுகப்படுத்தப்படுகின்ற கலைத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள செயற்பாடுகள் உறுதுணையாக அமையும்.

புதிய கலைத்திட்ட சீரமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான முதன்மைப் பணிகளை மேற்கொண்ட கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகங்கள் வழங்கிய சேவையைப் பெரிதும் போற்றுகின்றேன். மேலும் இக்கலைத்திட்டத்துக்கான கற்றல் சாதனங்களைத் தயாரிப்பதில் பங்களிப்பு வழங்கிய நிறுவனத்தின் அனைத்து ஆளணியினருக்கும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பணிப்பாளர்கள் ஆகியோருடன் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பல்வேறுவகையிலும் வழங்கிய உதவிகளும் இக்கற்றல் சாதனங்கள் பண்புத்தரம் கொண்டதாகவும் உயரிய மேம்பாடு கொண்டதாகவும் மிளிர்வதற்கு உறுதுணையாக இருந்தது என்பதை மகிழ்ச்சியுடன் நினைவுபடுத்துகின்றேன்.

கலாநிதி எஸ்.ஏ.டி சமரவீர
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம, இலங்கை

## பாடத்திட்டக் குழு

**ஆலோசனை:**

பேராசிரியர் மஞ்சுளா வித்தான பத்திரண கலாநிதி
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

திரு தர்ஷன சமரவீர
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகன், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**மேற்பார்வை:**

திருமதி ஆர்.எம்.குமுதுமலீ த சில்வா
பணிப்பாளர், முன் பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்
கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

**இணைப்பாக்கம்:**

திரு. கனகநாதன் மகேந்திரன்
உதவி விரிவுரையாளர்,
முன் பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

**எழுத்தாளர் குழு:**

திரு. அஷ்ஷேக் எம்.எம்.ஏ.பிஸ்தாமி
மே.மா/கள/அல் முபாரக் கனிஷ்ட பாடசாலை மள்வானை

திருமதி. எம்.ஆர்.எஸ் பரீகா
மே /மினு /அலிகார் மகா வித்தியாலயம் கள்- எலிய

திரு.யு.எல்.ஏ. மொஹிதீன், (இலங்கை கல்வி நிருவாக சேவை - II)
பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை, நிகவெரடிய

திருமதி எம்.எம்.கே.மௌபியா
மேல்/ கம்/ முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம். கஹட்டோவிட்ட

திரு ரீ.எப்.சுஹுட்
ஆசிரிய ஆலோசகர்- ஆரம்பக்கல்வி
வலயக் கல்விப் பணிமனை- ஹம்பாந்தோட்டை

**செம்மையாக்கம்:**

ப.றபி. அஸ்லம், உதவிக் கல்வி பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)
வலயக்கல்வி பணிமனை வவுனியா தெற்கு.வவுனியா

எம். டி. எம். தௌஸீர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்,

தமிழ்மொழி மூலப் பாடசாலைகள், வலயக் கல்விப் பணிமனை, களனி

**கணினியாக்கம்:**

ரட்ணராஜா தனுஷா, வரைகலை வடிவமைப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்

### அறிமுகம் - சமயம் மற்றும் விழுமியக் கல்வி - ஆரம்பக் கல்வி

பல்வேறு சமயங்களும் கலாச்சாரங்களும் இணைந்து வாழும் சமூகத்தில், சமயக் கல்வி இணக்கப்பாட்டை வளர்க்கும் முக்கியமான காரணியாக விளங்குகிறது. சமயங்களுக்கிடையில் தத்துவ ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் வேறுபாடுகள் காணப்பட்டாலும், அவை சமூக ஒற்றுமையை பாதிக்காத வகையில் புரிதலும் பரஸ்பர மரியாதையும் வளர்க்கப்படுதல் அவசியமாகும். இவ்வகையில் சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்வி தேசிய ஒற்றுமை, சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான அடித்தளமாக அமைகிறது.

தேசிய கல்வி முறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக, சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்வியின் மூலம் மாணவர்களுக்கு சரியான மதிப்புகளையும் நற்பண்புகளையும் வழங்குதல் கருதப்படுகிறது. குறிப்பாக, இஸ்லாம் பாடம் மாணவர்களின் வயது, முதிர்ச்சி, மொழித்திறன், விருப்பம் மற்றும் திறன்களை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் மூலம் கற்றல் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்வியின் இறுதி நோக்கம், மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதாகும். அதாவது, தலை, இதயம், கை, மனம் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் வகையில் அறிவு, உணர்வு, செயல்திறன் மற்றும் நல்ல மனப்பாங்குகளை வளர்த்தெடுத்து, எதிர்காலத்தில் சமூகத்திற்கு பயனுள்ள, ஆக்கபூர்வமான நபர்களை உருவாக்குதல் ஆகும்.

இஸ்லாம் ஒரு பூரணமான வாழ்க்கை முறையாகும் என்பதைக் குழந்தைகள் உணரும்படி இந்தப் பாடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாடசாலைக் கற்றல் மற்றும் ஆசிரியரின் வழிகாட்டலுடன் நடைபெறும் தொடர்பாடல் மூலம், இஸ்லாமிய மதிப்புகள் மாணவர்களின் உள்ளங்களில் பதியச் செய்யப்படுவதுடன், அவற்றை நாளாந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் திறனும் வளர்க்கப்படுகிறது.

முக்கியமான சமூக மற்றும் சமய எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தப் பாடத்திட்டம், மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும் தனிநபர் முன்னேற்றத்திற்கும் தேவையான திறன்களை வலுப்படுத்துகிறது. மேலும், எதிர்கால சவால்களை துணிவுடனும் பொறுப்புடனும் எதிர்கொள்ளக்கூடிய குடிமக்களை உருவாக்கும் நோக்கத்தையும் கொண்டுள்ளது.

### கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

ஆரம்பப் பிரிவில் இஸ்லாம் கற்பிக்கும் போது மாணவர்கள் விரும்பும் செயற்பாடுகள் அதிகமாகத் தேவைப்படும் சமய சுற்றுலாக்கள், மஸ்ஜீத் பார்வையிடல் மேலும் ஒழுக்க விழுமியங்கள் பிரதானமானவையாகும். மேலும் இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய நபி(ஸல்) அவர்களின் முன்மாதிரிகள் வெளிப்படுத்தும் கதைகள், கற்றல் வளங்களுடன் முன் வைக்க வேண்டும் அது தொடர்பான பாடல், சித்திரம் போன்ற செயற்பாடுகளை முன் வைத்து மாணவர்கள் இஸ்லாம் பாடத்தைக் கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்தி அல்லாஹ் பற்றிய நம்பிக்கையை உறுதிப்படுத்த முடியும்.

சமயக் கிரியைகளை உள்ளடக்கிய சமய வாழ்க்கையுடன் தொடர்புடைய செயற்பாடுகளைப் பெருமளவில் பயன்படுத்துதலைப் பிரதான கற்றல் - கற்பித்தல் முறையாகக் கொள்வதைத் தூண்டும் வகையில் இருப்பிட வேலைகள் குறைவானவையும் மாணவருக்குக் களிப்பூட்டத்தக்கவையுமான செயற்பாடுகளை அதிகமாகப் பயன்படுத்தலே தரம் 1 இல் எதிர்பார்க்கப்படுவதாகும். 1-5 வரையான ஆரம்ப பிரிவில் இஸ்லாம் தொடர்பான கற்றல் அனுபவங்களை பெறும் மாணவர்கள் ஆரம்ப பிரிவு முடிவில் பொதுக் குறிக்கோள்களை அடைவது எதிர்பார்க்கப்படுகின்றது.

## பாடசாலை கொள்கைகள் மற்றும் வேலை திட்டங்கள்

பாடசாலைக் கலாச்சாரம் மற்றும் வேலைத் திட்டங்களில் இஸ்லாம் பாடநெறிக்கு பொருத்தமான எண்ணக்கருக்களை கட்டியெழுப்பும் புதிய ஆக்கம் குறித்து அதிபர்கள் விசேட அவதானம் செலுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்ப பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் சமய வேலைத்திட்டங்கள் இவைகளில முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இந்த வேலைத்திட்டத்தில் தரம் 1 இல் எளிமையாக ஆரம்பித்து தரம் 5 வரை படிப்படியாக முன்னேற்றம் அடையச் செய்தல் விரும்பத்தக்கது. இதனால் மாணவர் பல துறைகளிலும் இணைந்து செயல்படும் தன்மை உருவாகும்.

ஆசிரியர் வாரத்துக்கு ஒருமுறை மாணவரை மஸ்ஜிதுக்கு அழைத்து செல்ல வேண்டும். மஸ்ஜிதில் நடைபெறும் வழிபாடு மூலமாக மாணவரில் ஆன்மீக தன்மை உருவாகும். இந்த செயலால் ஜமாத்தினர் - மௌலவி தொடர்பு வளர்ச்சி அடைகின்றது. நல்லதொரு சமூகம்உருவாக்கப்படவும் இது காரணியாக அமையும்.

நபரின் தூய்மை, நேர்மை, கருணை, இரக்கம், சமத்துவம், நட்பு, ஒத்துழைப்பு, ஒற்றுமை போன்ற நற்பண்புகளினால் பாடசாலை கலாச்சாரம் போசனை அடையும். அவ்வாறான கலாச்சாரத்தில் சமயம் மற்றும் ஒழுக்கவியல் பாடத்தில் எதிர்பார்க்கும் அத்தியாவசிய கற்பித்தல் எண்ணக்கரு உறுதிப்படுதல் எளிதாகும். இவ்வாறான நிலைப்பாடு ஏற்படும் வேளையில் பாடத்தில் கற்றவைகள் அனைத்தும் நடைமுறை பாவனையில் பயன்படுத்தும் தேவை உருவாகும்.

## கணிப்பீடு செய்தல்

ஆரம்ப தரங்களில் எழுத்துப் பரீட்சை கணிப்பீட்டை விடசெயற்பாடுகளுக்கு முக்கியத்-துவம் வழங்கப்பட வேண்டும். அவதானிப்புக்கள், ஆராய்தல், களப் பயணங்கள், அபிநயம், நாடகம், பொம்மலாட்டம், கலந்துரையாடல், வாய்மொழி வினாக்கள் போன்ற கணிப்பீட்டு முறைகளையும் பயன்படுத்துதல் விரும்பத்தக்கது.


## சமயம் மற்றும் ஒழுக்கவியல் பாடத்தின் நோக்கம்

நிலைபேறான சமாதானத்தினை இடைவதற்காக பரந்தளவிளான தெளிவினைக் கொண்டு பன்முகத்தன்மையினை கௌரவிக்கின்ற உணர்வுகளையும் வழுமியங்களையும் மதிக்கின்ற சனநாயகத்தையும் நீதியையும் மதித்து வாழும் குடிமகனை உருவாக்குவதே சமயப் பாடத்தின் பிரதானமான நோக்கமாகும்.

## சமயம் மற்றும் ஒழுக்கவியலைக் கற்பிப்பதன் நோக்கம்

1. நீதி, நேர்மை, ஒழுக்கம், சிந்தனைமிக்க குடிமகனை உருவாக்குதல்.
2. மனித நேயத்தின் அடிப்படையில் பல்வேறு பாரம்பரிய பழக்கவழக்கங்களையும் வழிபாடுகளையும் மதித்து வாழ்தல்.
3. எமது சூழலில் காணப்படும் வேறுபாடுகளை தர்க்கரீதியாக ஏற்று மதித்து சமூக சகவாழ்வை மேம்படுத்தல்.
4. உளஅமைதி மற்றும் ஆன்மீக மகிழ்ச்சியை அனுபவித்தல்.
5. தனிப்பட்ட நபர்கள் மற்றும் பல்வேறு சமுகங்களுக்கிடையே ஆரோக்கியமான உறவுகளை விருத்தி செய்தல்.
6. சமுக கலாசார மற்றும் சுற்றுச் சூழல் சார்ந்த உணர்திறன்களுக்கு பங்களிப்பதன் மூலம் சவால்களை நேர்மறையாக எதிர்கொள்ளல்.

# சமயம் மற்றும் ஒழுகலாறு பாடத்தின் அத்தியாவசிய கற்றல் எண்ணக்கரு



| சமயம் மற்றும் ஒழுகலாறு சார் கல்வியின் பிரதான அடிப்படை எண்ணக்கரு | |
|---|---|
| நடத்தை மேம்பாடு | எந்தவொரு சவாலையும் வெற்றி கொள்வதற்கு ஆற்றலுடன் கூடிய நேர்சிந்தனையை போசணைப்படுத்துவது போன்று உடல் உளம் சமூகம் சார்ந்த சிந்தனைகள் நிறைந்த ஆளுமை விருத்தியுடைய நபரை உருவாக்குதல். |
| சமூக மற்றும் கலாசார உணர்வுகள் | சமயம் மற்றும் கலாசார வேறுபாடுகளின்றி அனைவருடனும் ஒன்றிணைந்து மற்றும் ஏனையோரை அறிவுபூர்வமாக, நேயத்துடன் ஏற்றுக்கொள்வதோடு மற்றைய சமூக கலாசாரப் பின்னணி தொடர்பாகப் புரிந்துணர்வுடன் செயற்படுகின்ற ஆற்றல். |
| சூழல் நேயம் | சூழல் நேயம் வாயிலாக ஒருவருக்கு அவரது சுற்றாடல் தொடர்பான விபரங்களைத் தெரிந்துகொள்வதற்கும் தயார்ப்படுத்துவதற்கும் ஏற்ற திறமை தொடர்பாக விளக்கிக் கூறுவார். இது அனைத்து சமயக் கொள்கைகளிலும் காணக்கூடிய பிரதான பண்பாகும். இது தீர்க்கமான ஒரு காரணியாக அமைவது ஒருவருக்கு பல்வேறுபட்ட சூழல் நிலைமைகளுக்கு தம்மை ஏற்புடைமை ஆக்கிக்கொள்வதற்கு இடமளிப்பதாகும். |
| நன்னடத்தை விழுமியங்கள் மற்றும் சமத்துவம் | சிறப்பான சமூக நடவடிக்கைகளுக்கு அவசியமான ஏற்புடைய சமூகம், கலாசாரம் மற்றும் சமயப் பெறுமானங்கள், கொள்கைகள், நன்னடத்தை, விழுமியங்கள் மற்றும் சமத்துவம் என்றவாறு வாழ்க்கையை அமைத்துகொள்வதாகும். |
| பலம் ஆரோக்கியம் மற்றும் நற்பழக்கவழக்கம் | உடல் மற்றும் உள சமநிலையைக் கடைப்பிடித்து மனச்சோர்வற்ற ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கான எப்போதும் நல்ல நினைவாற்றலுடன் செயற்படுதல். |

| சமயம் மற்றும் ஒழுகலாறு<br>ஆரம்பக் கல்விக்கான அடிப்படை எண்ணக்கரு விபரங்கள் | |
|---|---|
| நடத்தை மேம்பாடு | ஆசிரியர் மற்றும் மூத்தவர்களின் வழிகாட்டுதலின் கீழ் “சமயம்” எனும் எண்ணக்கருவை அறிந்து தமது சரிதை மற்றும் நடத்தையை சரியாக வடிவமைத்துக் கொள்ளும் எளிய சமய செயற்பா-டுகளில் ஈடுபடுவர். |
| சமூக மற்றும் கலாசார புரிந்துணர்வு | தாம் வாழும் பல்வகைமை சார் சமயச் சூழலில் இடம்பெறுகின்ற சமயம் சார்ந்த விழாக்கள், நடையுடை பாவனைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவை தொடர்பான அனுபவங்களைப் பெற்று கலாசார பல்வகைமை தொடர்பான விளக்கத்துடன் அனைவருடனும் ஒன்றிணைந்து செயற்படுவார். |
| சூழல் நேயம் | வாழ்க்கை என்பது சுற்றுச் சூழலுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமையை சமயத்தின் ஊடாகப் புரிந்துகொண்டு, சூழல் நேயத்துடன் செயலாற்றுவார். |
| நன்னடத்தை, விழுமியங்கள் மற்றும் சமத்துவம் | சமயம் சார்ந்து நடைபெறுகின்ற விதிமுறைகள், சட்டதிட்டங்கள், வணக்கமுறைமை மற்றும் பிரயோகிக்கும் விசேட சொல்லாடல் தொடர்பாக புரிந்துணர்வுடன் செயற்படுவார். சமயம் சார்ந்த தலங்களுக்கு ஏற்றவாறு உடையணிதல், சரியான நடத்தையை மேற்கொள்வதற்கு ஆவன செய்வார். |
| பலம் ஆரோக்கியம் மற்றும் நற்பழக்கவழக்கம் | அன்றாட செயற்பாடுகளை உறுதியுடன் நினைவாற்றலுடனும் செய்வதற்கு பயிற்சி பெற்று, தமது நடவடிக்கைகளைக் கலக்க மின்றி மகிழ்ச்சியாகச் செய்வார். சிறந்த அன்றாட நடத்தைக் கோலத்தை மேற்கொள்வதற்காக சிறந்த ஆரோக்கிய நற்பழக்கங்களைக் கடைப்பிடிப்பார். |

| தரம் 1 - சமயம் மற்றும் ஒழுகலாறு பாடச் சட்டகம் - முதலாம் தவணை | | | |
|---|---|---|---|
| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றல் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
| 1.பிரபஞ்சத்தைப் படைத்தவன் அல்லாஹ் ஒருவன் என்பதை ஏற்றுக் கொண்டு அல்லாஹ்வை நினைவுபடுத்தி நடப்பார். | படைப்பாளன் அல்லாஹ், அல்லாஹ்வின் பிரபஞ்சப் படைப்புக்கள் அல்லாஹ் திரு நாமத்தை கூறுவார். | 1.1 அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ் என்பதை கூறுவார். | 1.1.1 பிரபஞ்சப் படைப்புக்களை அவதானிக்கும் போது அவற்றைப் படைத்தவன் அல்லாஹ் என்று கூறுவார் |
| | | 1.2 அல்லாஹ்வின் படைப்புக்கள் முன்வைப்பார். | 1.2.1 அல்லாஹ்வின் படைப்புக்களை காட்சிப்படங்களாக வரைவார். |
| | | 1.3 அல்லாஹ் என்ற திரு நாமத்தை மொழிந்து அவனை நினைவு கூறுவார். | 1.3.1 வாழ்வில் சகல நிலையிலும் அல்லாஹ் என்ற திரு நாமத்தை மனப்பூர்வமாக நினைவு கூறுவார். |
| 2. வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே என்பதை எடுத்துக்கூறி அந்த உணர்வோடு வணக்கங்களில் ஈடுபடுவார். | வணங்கி வழிபட மிகவும் தகுதியானவன் அல்லாஹ் முதலாம் கலிமா அன்றாட வணக்கங்கள். பிரபஞ்சப் படைப்புக்கள் | 2.1 வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ் என்பதைக் கலிமா மூலம் முன்வைப்பார். | 2.1.1 முதலாம் கலிமாவை கூறுவார். |
| | | 2.2 வணங்கி வழிபாடும் பிரதான இடமாக மஸ்ஜிதை அறிமுகம் செய்வார். | 2.2.1 மஸ்ஜிதின் புனிதம் பேணுவார். |

| | | | |
|---|---|---|---|
| 3. முஹம்மத் நபி (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் இறுதித் தூதராக ஏற்று நடப்பார். | இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள். | 3.1 பாடலினூடாக இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை அறிமுகம் செய்வார். | 3.1.1 இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை அறிமுகம் செய்தல். |
| | இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது நற்பண்புகள். | 3.2இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது நற்பண்புகளை கதையினூடாக முன்வைப்பார். | 3.2.1 அன்றாட வாழ்வில் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது நற்பண்புகளை பின்பற்றி ஒழுகுவார். |
| 4. நபி (ஸல்) அவர்களின் போதனைகளைப் பின்பற்றி தாவரங்கள், பிராணிகள் உட்பட எல்லா உயிர்களுக்கும் அன்பு காட்டுவார். | உயிர்களுக்கு அன்பு காட்டுதல். | 4.1 அயற்சூழலில் வாழும் பிராணிகளுக்கு அன்பு காட்டுவார். | 4.1.1 அயற்சூழலில் வாழும் பிராணிகளை அடையாளம் காட்டுவார். |
| | இயற்கைச் சூழலைப் பராமரித்தல். | 4.2 வீட்டுத்தோட்டம் செய்து அவற்றை நீரூற்றிப் பேணிப் பராமரிப்பார் | 4.2.1 வணக்கமாக கருதி வீட்டுத்தோட்டம் செய்து அவற்றை நீரூற்றிப் பேணிப் பராமரிப்பார். |
| 5. பொருத்தமான சந்தர்ப்பங்களில் உரிய சொற் பிரயோகங்களைப் பாவித்து அல்லாஹ்வை நினைவுபடுத்துவார். | தினமும் அல்லாஹ்வை நினைவு படுத்தல். | 5.1 அல்லாஹ்வை நினைவூட்டி பொருத்தமான வாசகங்களை மொழிவார் | 5.1.1 உரிய சந்தர்ப்பங்களில் அல்லாஹ்வை நினைவூட்டல். |
| | பிரதான திக்ர்கள் | 5.2 அல்லாஹ்வை நினைவூட்டும் பிரதான மூன்று திக்ர்களையும் கூறுவார். | 5.2.1 அல்லாஹ்வை நினைவூட்டும் பிரதான மூன்று திக்ர்களையும் மொழிதல். |
| 6. கலிமா தைய்யிபாவை உச்சரித்து கூறுவார். | கலிமா தைய்யிபா | 6.1 கலிமா தைய்யிபாவின் உள்ளடக்கத்தை சுருக்கமாக கூறுவார். | 6.11 அல்லாஹ்வை இறைவனாகவும் முஹம்மத் (ஸல்) அவர்களை தூதராகவும் ஏற்று நடத்தல். |
| | கலிமா தைய்யிபா (பொருளுடன்) | 6.2 கலிமா தைய்யிபாவின் பொருள் கூறுவார். | 6.2.1 கலிமா தைய்யிபாவை பொருளுடன் கூறுதல். |

| | | | |
|---|---|---|---|
| 7. வகுப்பறை மற்றும் அயற் சூழலைச் சுத்தம் செய்வார். | வகுப்பறைச் சுத்தமும் அழகும் | 7.1 வகுப்பறையை சுத்தமாகவும் அழகாகவும் வைப்பார். | 7.11 அன்றாடம் வகுப்பைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்தல். |
| | ஈமானும் சூழல் சுத்தமும் | 7.2 சுத்தம் பற்றிய நபிமொழியை பொருளுடன் கூறுவார். | 7.2.1 சுத்தம் பற்றிய நபிமொழியை பொருளுடன் முன்வைத்தல். |
| 8. மனதை ஒருநிலைப்படுத்தி மகிழ்வுடன் வாழ்வார். | சகல செயற்பாடுகளையும் இறைவனுக்காகச் செய்தல் | 8.1. அன்றாடம் வகுப்பைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்தல். | 8.1.1 அன்றாட வாழ்வில் ஓத வேண்டிய சந்தர்ப்ப துஆக்களை தவறாமல் ஓதுதல். |
| | தூங்கி எழுந்ததும் ஓதும் துஆ | 8.2. மகிழ்வான வாழ்க்கைக் கோலம் ஒன்றை பின்பற்றுவார் | 8.2.1 தூங்கி எழுந்த பின் துஆ ஓதி அன்றைய நாளை ஆரம்பித்தல். |

**பாட உள்ளடக்கம் - முதலாம் தவணை**

1. அல்லாஹ் படைப்பாளன்

2. வணங்கி வழிப்படத்தக்கவன் அல்லாஹ் ஒருவனே

3. நபி முஹம்மத் (ஸல்) அவர்களது நற்பண்புகள்

4. உயிர்களுக்கு அன்பு காட்டுவோம்

5. அல்லாஹ்வை நினைவு கூர்வோம்

6. கலிமா தையிபா

7. வகுப்பறை சுத்தம் பேணுவோம்

8. மன நிறைவுடன் வாழ்வோம்

**எண்ணக்கரு - பண்புசார் விருத்தி**
**பாடம் 01 - அல்லாஹ் படைப்பாளன்**

பிரபஞ்சப் படைப்புக்களை அவதானிப்பதன் ஊடாக அவற்றை அழகுற படைத்தவன் அல்லாஹ் என்பதை விசுவாசித்து அனைத்து சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்வை நினைவுபடுத்துவது பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 1.பிரபஞ்சத்தைப் படைத்தவன் அல்லாஹ் ஒருவன் என்பதை ஏற்றுக் கொண்டு அல்லாஹ்வை நினைவுபடுத்தி நடப்பார். | • படைப்பாளன் அல்லாஹ் | 1.1 அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ் என்பதை கூறுவார். | 1.1.1 பிரபஞ்சப் படைப்புக்களை அவதானிக்கும் போது அவற்றைப் படைத்தவன் அல்லாஹ் என்று கூறுவார். |
| | • அல்லாஹ்வின் பிரபஞ்சப் படைப்புக்கள் | 1.2 அல்லாஹ்வின் படைப்புக்களை முன்வைப்பார். | 1.2.1 அல்லாஹ்வின் படைப்புக்களை வரைவார். |
| | • அல்லாஹ் என்ற திருநாமம் | 1.3 அல்லாஹ் என்ற திருநாமத்தை மொழிந்து அவனை நினைவு கூறுவார். | 1.3.1 வாழ்வில் சகல நிலையிலும் அல்லாஹ் என்ற திருநாமத்தை மனப்பூர்வமாக நினைவு கூறுவார். |

**கற்றல் வளங்கள்**

- இயற்கைக் காட்சிகள்
- நிறந்தீட்டப் பொருத்தமான வகையில் “அல்லாஹு காலிகுனா” أَللهُ خَالِقُنَا எழுதப்பட்ட அட்டைகள்.
- நிறக்கடதாசி,
- ஒட்டும் பசை.
- செயல் நூல்
- காணொளிகள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- மாணவர்களை வெளிச்சூழலுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- வெற்றுக்கண்களால் பார்க்க முடியுமான இயற்கைப் பொருட்களை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் அவதானித்த விடயங்கள் பற்றி தனியாகவும் குழுவாகவும் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இயற்கை முழுவதையும் படைத்தவன் அல்லாஹ் என்பதை வலியுறுத்துங்கள்.
- “அல்லாஹு காலிகுணா” என்பதனையும் அதன் பொருளையும் (அவனே எம்மை படைத்தவன்) என்பதையும் விளக்கி மாணவர்களும் கூற சந்தர்ப்பம் கொடுங்கள்.
- செயல்நூலில் 1ம் செயற்பாட்டை செய்ய வழிப்படுத்துங்கள்.

**படிமுறை 2**

- மாணவர்களை குழுக்களாக்குங்கள்.
- மாணவர்கள் அவதானித்த விடயங்களை வகைப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள் (உயிருள்ளவை, உயிரற்றவை)
- வானத்தை அவதானிக்கச் செய்யுங்கள்.
- சூரியன் மற்றும் மேகங்கள் குறித்து கலந்துரையாடுங்கள்.

**படிமுறை 3.**

- கீழ்வரும் வினாக்களை வினவுங்கள்
    1) சூரியன் எப்பொழுது உதிக்கும்? எப்போது மறையும்? சந்திரன் எப்பொழுது தோன்றும்? நட்சத்திரங்களைப் படைத்தவன் யார்?
    2) மரங்கள் எவ்வாறு அசைகின்றன? காற்றைப் படைத்தவன் யார்?
    3) மழையைப் பொழிய வைப்பவன் யார்?
    4) இரவு, பகல் தோன்றக் காரணமானவன் யார்?
    5) எம்மைப் படைத்தவன் யார்?
- மேற்கூறப்பட்ட அனைத்துக்கும் விடை அல்லாஹ் ஒருவனே என்பதை எடுத்துக் கூறுங்கள்.
- செயல் நூலில் 2ம், 3ம் செயற்பாடுகளை செய்ய வழிப்படுத்துங்கள்.

**படிமுறை 4**

பாடல்

அல்லாஹ் எம்மைப் படைத்தவனாம்
அன்பும் அருளும் பொழிபவனாம்
என்றும் எம்மைக் காப்பவனாம்
எங்கள் ரப்புல் ஆலமீனாம்.

- மேற்படி பாடலை பொருத்தமான தாளத்துடன் பாடிக்காட்டுங்கள்.
- ஆசிரியருடன் இணைந்து மாணவர்களும் பாடி மகிழ சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுவாகப் பாடி மகிழ மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- நாம் அல்லாஹ்வை கண்களால் காண முடியாவிட்டாலும் அவன் எம்மைப் பார்த்துக் கொண்டு இருப்பதாக சொல்லுங்கள்.
- செயற்பாடு 4 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ் எனக் கூறுவார். | 1.1.1 | அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ் என்பதை உதாரணங் களுடன் தெளிவாகக் கூறுவார். | அனைத்தையும் படைத்தவன் யார் என்பதைக் கூற சிரமப்படுவார். |
| அல்லாஹ்வின் படைப்புக்களை முன்வைப்பார். | 1.2.1 | அயற்சூழலை அவதானித்து 5 படைப்புக்களின் பெயர்களைக் கூறுவார். | அயற்சூழலை அவதானித்து படைப்புக்களின் பெயர்களைக் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| அல்லாஹ் என்ற திருநாமத்தை மொழிந்து அவனை நினைவு கூறுவார். | 1.3.1 | எல்லா சந்தர்ப்பங் களிலும் அல்லாஹ்வை நினைவு கூறுவார். | எந்த சந்தர்ப்பத்திலேனும் அல்லாஹ்வை நினைவு கூற சிரமப்படுவார். கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - பண்புசார் விருத்தி**
**பாடம் 2 - வணங்கி வழிப்படத் தக்கவன் அல்லாஹ் ஒருவனே**

வணங்கி வழிபட மிகவும் தகுதியானவன் அல்லாஹ் என்பதை உறுதியாக ஏற்று அதன்படி தினமும் அவனை வணங்கி வரவேண்டும் என்பது பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 2. வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே என்பதை எடுத்துக்கூறி அந்த உணர்வோடு வணக்கங்களில் ஈடுபடுவார். | • வணங்கி வழிபட மிகவும் தகுதியானவன் அல்லாஹ்<br>• முதலாம் கலிமா<br>• அன்றாட வணக்கங்கள்.<br>• பிரபஞ்சப் படைப்புக்கள் | 2.1 வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ் மட்டுமே என்பதைக் கலிமா மூலம் முன்வைப்பார். | 2.1.1 முதலாம் கலிமாவை பொருளுடன் கூறுவார். |
| | | 2.2 வணக்கத்தில் ஈடுபடும் பிரதான இடமாக மஸ்ஜிதை அறிமுகம் செய்வார். | 2.2.1 மஸ்ஜிதின் புனிதம் பேணி வணக்கங்களில் ஈடுபடுவார். |

**கற்றல் வளங்கள்**

- “லாஇலாஹா இல்லல்லாஹ்” என்று பொருளுடன் எழுதப்பட்ட அட்டைகள்.
- தனியாகவும் கூட்டாகவும் அல்லாஹ்வை வணங்கக்கூடிய படங்கள்.
- செயற்பாட்டு நூல்
- மஸ்ஜிதின் பகுதிகளை காட்டும் படங்கள்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- மாணவர்களை ஓர் அமைதியான சூழலுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- வசதியாக அமர்ந்து கொள்ள வழிப்படுத்துங்கள்.
- கண்களை மூடுமாறு சொல்லுங்கள்.
- நன்றாக மூச்செடுத்து வெளிவிட வழிப்படுத்துங்கள்.
- எம்மைப் படைத்த இறைவனை ஏன் வணங்க வேண்டும் என்பது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- அல்லாஹ் ஏன் எம்மைப் படைத்துள்ளான் என்பதை நினைவுபடுத்தி மாணவர்களுக்கு ஏற்றவாறு தெளிவு படுத்துங்கள்.

படிமுறை 2

- “லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற வசனத்தை சரியாக உச்சரியுங்கள்.
- தனித்தனியாக உச்சரிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- “லா இலாஹ இல்லல்லாஹ்” என்றால் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதை மாணவர்களுக்கு வலியுறுத்துங்கள்.
- தினமும் அல்லாஹ்வை நினைவு செய்யுங்கள்.
- 1வது செயற்பாட்டைச் செய்வதற்கான வழிமுறைகளை வழங்கவும்.

படிமுறை 3

- மாணவர்களை அருகில் உள்ள மஸ்ஜிதுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மஸ்ஜிதில் பல பிரதான இடங்கள் மற்றும் அடையாளங்கள் இருப்பதைக் குறிப்பிடுங்கள்.
- அதில் வணக்கம் செலுத்தும் இடம், அதான் (குரல்), வுழு (சுத்திகரிப்பு), மிம்பர் (உபதேசம்), மிஹ்ராப் (தொழுகை), மினாரா (தூண்கள்) ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி அதை கவனமாக கவனிக்க வாய்ப்பளியுங்கள்.
- சுருக்கமாக அவற்றைப் பற்றி விளக்குங்கள்.
- மாணவர்கள் ஒவ்வொரு இடத்தையும் தனித்தனியாகச் சுட்டிக்காட்டி அதற்குப் பெயரிட வாய்ப்பளியுங்கள்.
- 2வது செயற்பாட்டைச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

படிமுறை 4

- அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களை கலந்துரையாடுங்கள்.
- 3வது செயற்பாட்டைச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் செயற்பாடு 3 ஐ முடித்த பிறகு, எல்லா சூழ்நிலைகளிலும் நாம் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார் |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| வணங்கி வழிபடத் தகுதியானவன் அல்லாஹ் என்பதை முதலாம் கலிமா மூலம் முன்வைப்பார். | 2.1.1 | முதலாம் கலிமாவை அதன் பொருளுடன் கூறுவார். | முதலாம் கலிமாவை கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| வணங்கி வழிபடும் பிரதான இடமாக மஸ்ஜிதை அறிமுகம் செய்வார். | 2.2.1 | மஸ்ஜிதின் பிரதான பகுதிகள் ஐந்தைக் கூறுவார். | மஸ்ஜிதின் பிரதான பகுதிகளைக் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - பண்புசார் விருத்தி**
**பாடம் 3 - முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் நற்பண்புகள்**

நபி முஹம்மத் (ஸல்) அவர்களது நற்பண்புகளை அறிந்து அவற்றை வாழ்வில் நடைமுறைப்படுத்துவதன் அவசியம் குறித்து தெளிவு பெற வேண்டும் என்பது இப்பாடம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 3. முஹம்மத் நபி (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் இறுதித் தூதராக ஏற்று நடப்பார். | • இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள். | 3.1 பாடலினூடாக இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை அறிமுகம் செய்வார். | 3.1.1 இறுதித் தூதர் முஹமத் (ஸல்) அவர்களை அறிமுகம் செய்தல். |
| | • இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது நற்பண்புகள். | 3.2இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது நற்பண்புகளை கதையினூடாக முன்வைப்பார். | 3.2.1 அன்றாட வாழ்வில் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது நற்பண்புகளை பின்பற்றுவதற்கு இடர்ப்படுவார். |

**கற்றல் வளங்கள் :**

- நபியவர்களது வரலாற்றுச் சம்பவம்
- செயற்பாட்டு நூல்
- அல்குர்ஆன் வசனம்.
- நற்குணங்கள் சில எழுதப்பட்ட அட்டைகள்

1. உண்மை பேசுவோம்
2. பொறுமை காப்போம்
3. பிறருக்கு உதவுவோம்
4. உயிர்களிடத்தில் அன்பு காட்டுவோம்

## நபி அவர்களின் நற்குணமும் மனம் மாறிய மூதாட்டியும்

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் எப்போதும் நற்பண்பு மிக்கவராகவே இருந்தார்கள். சிறுவர்களோடு அன்பாக இருந்தார்கள். அவ்வாறே முதியவர்களோடும் மரியாதையாக நடந்தார்கள். ஒருநாள் நபியவர்கள் பாதையில் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது வேற்று மதத்தை சேர்ந்த ஒரு மூதாட்டி தனது பொதிகளை சுமக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர் தள்ளாடித் தள்ளாடி நடந்தார். அப்போது அந்தப் பாதையால் வந்த நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அந்த மூதாட்டியின் அருகில் சென்றார்கள். “தாயே உங்களுக்கு நான் உதவி செய்ய தயாராக உள்ளேன். உங்கள் சுமைகளை நீங்கள் செல்லும் இடத்திற்கே சுமந்து வருகின்றேன் தாருங்கள்” என்று சுமந்து சென்றார்கள். அந்த மூதாட்டி தன் பொதிகளை சுமந்து வருபவர் முஹம்மத் (ஸல்) என்பதை அறியாது அவரை திட்டித் தீர்த்தார். ஆனால் நபியவர்கள் எதுவும் பேசாது மௌனமாகவும் பொறுமையாகவும் அவற்றை செவிமடுத்துக் கொண்டே நடந்தார்கள். கோபப்பட்டு சுமைகளை தூக்கி வீசவோ, எதிர்த்து பேசவோ இல்லை. இப்படியாக தனது ஆத்திரம் தீரும் வரை நபியவர்களுக்கு ஏசிக் கொண்டே வந்தார் மூதாட்டி. தான் சேர வேண்டிய இடத்தை வந்தடைந்தார். இறுதியாக மூதாட்டி நபி முஹம்மத் (ஸல்) அவர்களிடம் அவரைப்பற்றி விசாரித்தார். இதுவரை தான் திட்டிக்கொண்டு வந்தவர் தான் முஹம்மத் என்பதை அறிந்து தனது செயலுக்காக வருந்தி வெட்கப்பட்டார். அவரது நற்குணத்தால் கவரப்பட்டு முஹம்மத் (ஸல்) அவர்களை நபியாக ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்றி வாழ்ந்தார்.

பாடல்

உம்மி நபி எங்கள் முஹம்மத் நபி
உயிர்களிடம் அன்பு வைத்த எங்கள் நபி
உண்மை பேசி வாழ்ந்த நபி
பொறுமை காத்த பூமான் நபி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இறுதித்தூதர் என்பதை ஏற்று அவரை பின்பற்றி நடக்க வலியுறுத்துங்கள்.
- நபியவர்கள் முன்மாதிரி என்பதை எடுத்துக்கூறும் அல்குர்ஆன் வசனத்தை வாசித்து காட்டுங்கள். அதன் பொருளை கூறுங்கள்.
- கதையின் படிப்பினைகளை கலந்துரையாடுங்கள்.
- நபியவர்களை நேசித்து அவர்களது முன்மாதிரிகளை பின்பற்றுவது கடமை என்பதை வலியுறுத்துங்கள்.
- மாணவர்களை 1 ஆம் செயற்பாட்டை செய்ய வழிப்படுத்துங்கள்.

படிமுறை 2

- நற்பண்புகள் அடங்கிய அட்டைகளை மாணவர்களுக்கு பகிர்ந்தளியுங்கள்.
- அவற்றில் உள்ள நற்பண்புகளை வாசித்துக்காட்டுங்கள்.
- மாணவர்கள் மீளவும் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் அறிந்த நபியவர்களின் நற்பண்பு ஒன்றை கூறுமாறு சொல்லுங்கள்.
- செயற்பாட்டு நூலில் செயற்பாடு 2 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

படிமுறை 3

- பாடலை தாளத்துடன் பாடிக்காட்டுங்கள்
- மாணவர்களை பாட வழிப்படுத்துங்கள்
- பாடல் பற்றி கலந்துரையாடுங்கள்
- பாடலில் கூறப்பட்ட நபியவர்களின் நற்பண்புகளை எடுத்து நடக்க வழிப்படுத்துங்கள்.
- செயற்பாடு 3, 4 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்

**கணிப்பீடு:**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| பாடலினூடாக இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை அறிமுகம் செய்வார். | 3.1.1 | தாளத்துடன் பாடலைப் பாடுவார்.<br><br>பாடலில் உள்ள நபியவர்கள் பற்றிய 3 பண்புகளை குறிப்பிடுவார். | நபியவர்களை அறிமுகம் செய்ய இடர்ப்படுவார். |
| இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது நற்பண்புகளை கதையினூடாக முன்வைப்பார். | 3.2.1 | கதைக்கூடாக நபியவர்களது பிரதான பண்புகள் மூன்றைக் கூறுவார். | நபியவர்களின், ஒரு நட்பண்பையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - பண்புசார் விருத்தி**
**பாடம் 4 - உயிர்களுக்கு அன்பு காட்டுவோம்.**

படைப்பினங்கள் அனைத்தின் மீதும் அன்பு காட்டி கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 4. நபி (ஸல்) அவர்களின் போதனைகளைப் பின்பற்றி தாவரங்கள், பிராணிகள் உட்பட எல்லா உயிர்களுக்கும் அன்பு காட்டுவார். | உயிர்களுக்கு அன்பு காட்டுதல். | 4.1 அயற்சூழலில் வாழும் பிராணிகளுக்கு அன்பு காட்டுவார். | 4.1.1 அயற்சூழலில் வாழும் பிராணிகளை அடையாளம் காட்டுவார். |
| | இயற்கைச் சூழலைப் பராமரித்தல். | 4.2 வீட்டுத்தோட்டம் செய்து அவற்றை நீரூற்றிப் பேணிப் பராமரிப்பார் | 4.2.1 வணக்கமாக கருதி வீட்டுத்தோட்டம் செய்து அவற்றை நீரூற்றிப் பேணிப் பராமரிப்பார். |

**கற்றல் வளங்கள் :**

- அயற்சூழலில் நடமாடும் பிராணிகளின் மாதிரி படங்கள்
- உயிரினங்களுக்கு அன்பு காட்டி தாவரங்களை பராமரிக்கும் படங்கள்
- செயற்பாட்டு நூல்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- அயற்சூழலில் வாழும் பிராணிகளின் பெயர்களை வினவுங்கள்.
- வீட்டில் செல்லப் பிராணிகளை வளர்க்கும் மாணவர்களிடம் அவை குறித்துவினவுங்கள்.
- அவற்றை பராமரிக்கும் விதம் உணவு கொடுக்கும் விதம் , குறித்து அனுபவங்களை பரிமாற சந்தர்ப்பம் கொடுங்கள்.
- பின்னர் ஒவ்வொரு படமாக காண்பித்து அவற்றுக்கு அன்பு காட்டும் விதம் பற்றி கலந்துரையாடுங்கள்.
- தாகித்த நாய்க்கு நீர் புகட்டியதால் சுவனம் சென்ற மனிதனின் சம்பவத்தை சுவைபட எடுத்துக் கூறுங்கள்.
- செயற்பாட்டு நூலில் 1ம் செயற்பாட்டைச் செய்ய வழிப்படுத்துங்கள்.

படிமுறை 2

- செடிகளுக்கு நீர் ஊற்றும் காட்சிப் படத்தை காண்பித்து தாவரங்களுக்கு அன்பு செலுத்தும் விதம் பற்றி கலந்துரையாடுங்கள்.
- தாவரங்களால் நாம் பெறும் நன்மைகளை எடுத்துக் கூறுங்கள்.
- தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பதை எடுத்துக் கூறி அவற்றை பராமரிக்கும் முறைகளை முன்வையுங்கள்.
- செயற்பாட்டு நூலில் 2 ம் செயற்பாட்டைச் செய்ய வழிப்படுத்துங்கள்.

படிமுறை 3

- மரம் நடுவதும் தருமம் என்பதை உணர்த்தி மரங்கள் நடுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.
- பாடசாலையில் உள்ள பொருத்தமான இடம் ஒன்றை தெரிவு செய்து ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாக ஒரு செடியை நட்டு பராமரிக்க வழிகாட்டுங்கள்.
- "பூமியில் உள்ளவர்களுக்கு இரக்கம் காட்டுங்கள் வானத்தில் உள்ளவன் உங்களுக்கு இரக்கம் காட்டுவான்" எனும் ஹதீஸையும் அதன் போதனைகளையும் விளக்குங்கள்.
- செயற்பாட்டு நூலில் 3 ம் செயற்பாட்டைச் செய்ய வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| 4.1 அயற்சூழலில் வாழும் பிராணிகளுக்கு அன்பு காட்டுவார். | 4.1.1 | அயற்சூழலில் வாழும் பிராணிகளுக்கு அன்பு காட்டிய சந்தர்ப்பமொன்றை கூறுவார். | அயற்சூழலில் வாழும் பிராணிகளுக்கு அன்பு காட்டிய சந்தர்ப்பமொன்றை கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| வீட்டுத்தோட்டம் செய்து அவற்றை நீரூற்றிப் பேணிப் பராமரிப்பார். | 4.2.1 | வீட்டுத்தோட்டம் செய்த அனுபவத்தைக் கூறுவார். | வீட்டுத்தோட்டம் செய்த அனுபவத்தைக் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - கலாசார , நாகரிக சமூக கலாசார உணர்வு**
**பாடம் 5 - அல்லாஹ்வை நினைவு கூர்வோம்.**

எந்த சந்தர்ப்பத்திலும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து வாழ வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 5. பொருத்தமான சந்தர்ப்பங்களில் உரிய சொற் பிரயோகங்களைப் பாவித்து அல்லாஹ்வை நினைவுபடுத்துவார். | தினமும் அல்லாஹ்வை நினைவு படுத்தல். | 5.1 அல்லாஹ்வை நினைவூட்டி பொருத்தமான வாசகங்களை மொழிவார் | 5.1.1 உரிய சந்தர்ப்பங்களில் அல்லாஹ்வை நினைவூட்டல். |
| | பிரதான திக்ர்கள் | 5.2 அல்லாஹ்வை நினைவூட்டும் பிரதான மூன்று திக்ர்களையும் கூறுவார். | 5.2.1 அல்லாஹ்வை நினைவூட்டும் பிரதான மூன்று திக்ர்களையும் மொழிதல். |

**கற்றல் வளங்கள் :**

- ஸுப்ஹானல்லாஹ் (பச்சை)
- அல்ஹம்துலில்லாஹ் (சிவப்பு)
- அல்லாஹு அக்பர் (நீலம்) என்று பொருளுடன் எழுதப்பட்ட நிற அட்டைகள்.

| பொருள் | அரபுப்பதம் |
|---|---|
| அல்லாஹ் தூய்மையானவன் | سُبْحَانَ اللهِ |
| எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே | اَلْحَمْدُ لِلّٰهِ |
| அல்லாஹ் மிகப் பெரியவன் | اَللّٰهُ أَكْبَرُ |

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- செயலட்டைகளை மாணவர்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- அவற்றை வாசித்துக் காட்டுங்கள்.
- மேற்படி திக்ர்கள் குறித்து மாணவர்களின் முன்னறிவை மீட்டிப்பாருங்கள்.
- அவற்றின் கருத்துக்களை கூறுங்கள்.
- அரபு வாசகத்துடன் பொருளையும் கூற வழிப்படுத்துங்கள்.
- அவற்றை பிரயோகிக்கும் சந்தர்ப்பங்களை எடுத்துக் கூறுங்கள்.

(உ+ம்) ஆச்சரியமான ஒன்றை காண்கையில் - ஸுப்ஹானல்லாஹ்

மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில் - அல்ஹம்துலில்லாஹ்

அல்லாஹ்வை பெருமைப்படுத்துகையில் - அல்லாஹு அக்பர்

இவ்வாறான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுங்கள்

- 1ம் செயற்பாட்டைச் செய்ய வழிப்படுத்துங்கள்

**படிமுறை 2**

- மாணவர்களை வெளியே அழைத்துச் சென்று குழுக்களாக்குங்கள்.
- அட்டைகளை மாணவர்களுக்கும் பகிர்ந்தளியுங்கள்.
- ஒவ்வொரு அட்டையையும் வெவ்வேறு இடங்களில் காட்சிப்படுத்துங்கள்.
- ஆசிரியர் உச்சரிக்கும் வார்த்தை உள்ள இடங்களை நோக்கி மாணவர்களை ஓடும்படி கூறுங்கள்.
- இவ்வாறு பல தடவைகள் மாறி மாறி செய்து மீள வலியுறுத்துங்கள்.
- ஆசிரியரின் தொனி வேறுபாடுகளுக்கும் முகபாவனைக்கும் ஏற்ப பொருத்தமான அட்டைகளை உயர்த்தி காட்டும்படி கூறுங்கள்.
- ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் ஆகிய திக்ர்களை உரிய சந்தர்பங்களில் உணர்வுபூர்வமாக கூற வழிப்படுத்துங்கள்.
- செயற்பாடு 2 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

**படிமுறை 3**

- மாணவர்களை 3 குழுக்களாக்கி ஒரு தலைவரை நியமியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு திக்ர் அட்டையை பகிர்ந்தளியுங்கள்
- குழுவின் தலைவர் தன்னிடமுள்ள அட்டையின் அரபு வாசகத்தை உரத்துக் கூறச்சொல்லுங்கள்.
- குழுவில் உள்ளவர்கள் அதன் பொருளைக்கூற வழிப்படுத்துங்கள். இவ்வாறு மூன்று

குழுக்களும் மாறி மாறி கூற வழிப்படுத்துங்கள்

- ஆசிரியர் தன்னிடம் உள்ள அட்டையை உயர்த்திக் காட்டியதுடன் அந்த திக்ரை மொழியும் சந்தர்ப்பத்தை கூற குழுக்களை வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார் |
|---|---|---|---|
| | | நிலை 2 | நிலை 1 |
| அல்லாஹ்வை நினைவூட்டி பொருத்தமான வாசகங்களை மொழிவார் | 5.1.1 | அல்லாஹ்வை நினைவூட்டுவதன் அவசியத்தை கூறுவார். | அல்லாஹ்வை நினைவூட்ட இடர்ப்படுவார். |
| அல்லாஹ்வை நினைவூட்டும் பிரதான மூன்று திக்ர்களையும் கூறுவார். | 5.2.1 | ஸுப்ஹானல்லாஹ் அல்ஹம்துலில்லாஹ் அல்லாஹு அக்பர் எனும் 3 திக்ர்களையும் பொருளுடன் கூறுவார். | பிரதான 3 திக்ர்கை-ளயும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - கலாசார, நாகரிக சமூக கலாசார உணர்வு**
**பாடம் 6 - கலிமா தைய்யிபா (அவ்வல் கலிமா)**

கலிமா தைய்யிபா கூறும் விடயங்களை தெளிவாக அறிந்து அல்லாஹ்வை விசுவாசித்து வாழ்வதோடு முஹம்மத் நபியை தூதராக ஏற்று பின்பற்ற வேண்டும் என்றும் இப்பாடம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 6. கலிமா தைய்யிபாவை உச்சரித்து கூறுவார். | • கலிமா தைய்யிபா | 6.1 கலிமா தைய்யிபாவை அரபு மொழியில் கூறுவார். | 6.11 அல்லாஹ்வை இறைவனாகவும் முஹம்மத் (ஸல்) அவர்களை தூதராகவும் ஏற்று நடத்தல். |
| | • கலிமா தைய்யிபா (பொருளுடன்) | 6.2 கலிமா தைய்யிபாவின் பொருள் கூறுவார். | 6.2.1 கலிமா தைய்யிபாவை பொருளுடன் கூறுதல். |

**கற்றல் வளங்கள் :**

- செயற்பாட்டு நூல்
- கலிமா தைய்யிபா பொருளுடன் எழுதப்பட்ட அட்டைகள்.

**கலிமா தைய்யிபா பாடல்**

லா இலாஹ இல்லல்லாஹ்
முஹம்மதுர் றஸுலுல்லாஹ்
அல்லாஹ் ஒருவனை வணங்கிடுவோம்
தூதர் முஹம்மதை ஏற்றிடுவோம்
எம்மை படைத்தவன் அல்லாஹ்வாம்
என்றும் அவனை நெருங்கிடுவோம்.
தூதர் முஹம்மதை துதித்திடுவோம்.
தூய்மை பேணி வாழ்ந்திடுவோம்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**
**படிமுறை 1-**

- கலிமா தைய்யிபாவை மனநிறைவுடன் கூறி பாடத்தை ஆரம்பியுங்கள்.
- லாஇலாஹ என்று எழுதப்பட்ட சொல்லட்டையை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துங்கள்.

- அதனை உச்சரித்துக் காட்டுங்கள்.
- குழுவாகவும் தனியாகவும் உச்சரித்துக்கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்

படிமுறை 2

- கலிமா தைய்யிபாவின் பொருளை மாணவருக்கு வாசித்துக் காட்டுங்கள்.
- கலிமா தைய்யிபாவை பொருளுடன் கூற வழிப்படுத்துங்கள்.
- வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதையும் வலியுறுத்திக் கூறுங்கள்.
- தினமும் “லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் றஸுலுல்லாஹ்” எனும் திக்ரை மொழிய வழிப்படுத்துங்கள்.
- மேற்படி பாடலை தாளத்துடன் பாடிக்காட்டுங்கள்.
- மாணவர்கள் பாட வழிப்படுத்துங்கள்.
- செயற்பாடு 2 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார் |
|---|---|---|---|
| | | நிலை 2 | நிலை 1 |
| கலிமா தைய்யிபாவை அரபு மொழியில் கூறுவார். | 6.1.1 | கலிமா தைய்யிபாவை அரபு மொழியில் உச்சரித்துக் கூறுவார். | கலிமா தைய்யிபாவை கூற சிரமப்படுவார். |
| கலிமா தைய்யிபாவின் பொருள் கூறுவார். | 6.2.1 | கலிமா தைய்யிபாவின் பொருளை கூறுவார். | கலிமா தைய்யிபாவின் பொருளைக் கூற சிரமப்படுவார். |

**எண்ணக்கரு - கலாசார , நாகரிக சமூக கலாசார உணர்வு**
**பாடம் 7 - வகுப்பறை சுத்தம் பேணுவோம்**

சுத்தம் ஈமானின் பாதி எனும் நபிமொழிக்கூடாக எமது வகுப்பறையை மிகவும் பரிசுத்தமாக வைக்க வேண்டும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்பது இப்பாடம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 7. வகுப்பறை மற்றும் அயற் சூழலைச் சுத்தம் செய்வார். | வகுப்பறைச் சுத்தமும் அழகும் | 7.1 வகுப்பறையை சுத்தமாகவும் அழகாகவும் வைப்பார். | 7.11 அன்றாடம் வகுப்பைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்தல். |
| | ஈமானும் சூழல் சுத்தமும் | 7.2 சுத்தம் பற்றிய நபிமொழியை பொருளுடன் கூறுவார். | 7.2.1 சுத்தம் பற்றிய நபிமொழியை பொருளுடன் முன்வைத்தல். |

**கற்றல் வளங்கள் :**

- சுத்தமான மற்றும் அசுத்தமான வகுப்பறைக்காட்சிகள் கொண்ட படங்கள்.
- சுத்தம் ஈமானின் பாதியாகும் எனும் ஹதீஸ் எழுதப்பட்ட அட்டை.
- பாடப் புத்தகம்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- மாதிரிப்படங்களைச் காட்சிப்படுத்துங்கள்.
- தமக்கு விருப்பமான வகுப்பறை எதுவென மாணவரிடம் வினவுங்கள்.
- தமது தெரிவுக்கான காரணத்தை வினவுங்கள்.
- அதன்படி தமது வகுப்பறையை சுத்தமாக வைத்திருக்க வேண்டிய வழிவகைகள் பற்றி கலந்துரையாடுங்கள்.
- செயற்பாடு 1 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்

படிமுறை 2

- “சுத்தம் ஈமானின் பாதியாகும்” எனும் ஹதீஸை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துங்கள்.
- ஹதீஸ் கூறும் கருத்துக்கள் பற்றி கலந்துரையாடுங்கள்.
- வகுப்பறை அசுத்தமடையும் வழிவகைகள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- தினமும் தமது வகுப்பறையை ஆர்வத்துடன் சுத்தம் செய்ய வழிப்படுத்துங்கள்.
- செயற்பாடு 2 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

படிமுறை 3

- தனது வகுப்பறையை வரைந்து நிறந்தீட்ட வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார் |
|---|---|---|---|
| | | நிலை 2 | நிலை 1 |
| வகுப்பறையை சுத்தமாகவும் அழகாகவும் வைப்பார். | 7.1.1 | வகுப்பறையை சுத்தமாக வைப்பதில் பங்களித்து நண்பர்களையும் தூண்டுவார். | வகுப்பறையை சுத்தமாக வைப்பதில் ஒத்துழைக்காமல் இருப்பார். |
| சுத்தம் பற்றிய நபிமொழியை பொருளுடன் முன்வைப்பார். | 7.2.1 | சுத்தம் பற்றிய நபிமொழியை தெளிவாக கூறி சுத்தமாக இருக்க வேண்டிய சந்தர்ப்பங்களை முன்வைப்பார். | சுத்தம் குறித்த நபிமொழியைக் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 8 - மன நிறைவுடன் வாழ்வோம்**

மன நிம்மதியாக வாழ வேண்டும் என்பதை உணர்ந்து தினமும் மகிழ்வுடனும் மன நிறைவாகவும் வாழப்பழக வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 8. மனதை ஒருநிலைப்படுத்தி மகிழ்வுடன் வாழ்வார். | சகல செயற்பாடுகளையும் இறைவனுக்காகச் செய்தல் | 8.1. அன்றாடம் வகுப்பைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்தல். | 8.1.1 அன்றாட வாழ்வில் ஓத வேண்டிய சந்தர்ப்ப துஆக்களை தவறாமல் ஓதுதல். |
| | தூங்கி எழுந்ததும் ஓதும் துஆ | 8.2. மகிழ்வான வாழ்க்கைக் கோலம் ஒன்றை பின்பற்றுவார் | 8.2.1 தூங்கி எழுந்த பின் துஆ ஓதி அன்றைய நாளை ஆரம்பித்தல். |

**கற்றல் வளங்கள் :**

- “செயற்பட்டு மகிழ்வோம்” வழிகாட்டி
- உடற்பயிற்சிகளில் ஈடுபட பொருத்தமான உடைகள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1 :-**

- அமைதியான வெளிச்சூழலுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லுங்கள்.
- தமது பாதணிகளையும் காலுறைகளையும் கழற்றி ஓரிடத்தில் வரிசையாக வைக்க வழிப்படுத்துங்கள்.
- குறிப்பிட்ட இடத்தில் மாணவர்களை வரிசையாக நிறுத்தி கைகளை பின்னால் கட்ட வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களிடம் பின்வரும் வினாக்களை வினவுங்கள்.

1) நீங்கள் நின்று கொண்டிருப்பதை உணர்கிறீர்களா?
2) உங்கள் உடல் நிறையை கால்களினால் உணர்கிறீர்களா?
3) நீங்கள் நின்று கொண்டிருக்கையில் காலால் எதனை உணர்கிறீர்கள்?
4) உங்கள் பாதங்கள் நிலத்தை தொடுவதை எவ்வாறு உணர்கிறீர்கள்?
5) கரடு முரடாக, மென்மையாக, வெதுவெதுப்பாக, குளிர்ச்சியை உணர்கிறீர்களா?

- மாணவர்களை அங்குமிங்கும் மெதுவாக நடக்க வழிப்படுத்துங்கள்.
- பின்னர் நடக்கும் வேகத்தை அதிகரிக்குமாறு கூறுங்கள்.
- வலது காலை தூக்கும் போது இடது காலாலும் இடது காலை தூக்கும் போது வலது காலாலும் உடலின் பாரத்தை உணர முடிகிறதா என வினவுங்கள்
- மிருதுவான தன்மை, கடின தன்மை போன்ற நிலத்தின் வேறுபாட்டை கால்களால் உணர முடிகின்றதா என்று வினவுங்கள்.
- இவ்வாறாக சில நிமிடங்கள் உணர்வு பூர்வமாக நடக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- அதே முறைப்படி மீண்டும் வகுப்புக்கு செல்ல வழிப்படுத்துங்கள்.

படிமுறை 2

- மன நிறைவாக நடக்கும் மேற்படி செயற்பாடு மூலம் மாணவர்கள் உணர்ந்த விடயங்களை பரிமாற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உணர்வு பூர்வமாக செயற்படுவதால் கிடைக்கும் பயன்கள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- சிறுபராயம் முதல் எந்த செயற்பாட்டையும் மனநிறைவுடன் செய்ய வேண்டும் என்பதை மீளவலியுறுத்துங்கள்.
- அன்றாடம் ஓத வேண்டிய சந்தர்ப்ப துஆக்களையும் அதன் சந்தர்ப்பங்களையும் அறிமுகம் செய்யுங்கள்.
- காலை மாலை சந்தர்ப்ப துஆக்கள் குறித்தும் அறிமுகம் செய்யுங்கள்
- தூங்கி எழும் போது ஓதும் துஆவை அறிமுகம் செய்யுங்கள்

படிமுறை 3

- மாணவர்கள் துலங்கும் வகையில் மன ஒருமைப்பாட்டுக்கான எளிமையான கட்டளைகளை வழங்கி செயற்பாடு 3 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| மனதை ஒருநிலைப்படுத்தி துஆவுடன் அன்றாட வாழ்க்கையை ஆரம்பிப்பார். | 8.1.1 | காலை திக்ர்களை ஓதி நிறைவான மனதுடன் அன்றைய நாளை ஆரம்பிப்பார். | காலை, மாலை திக்ர்களை ஓதுவதற்கு இடர்படுவார். |
| மகிழ்வான வாழ்க்கை கோலம் ஒன்றை பின்பற்றுவார். | 8.1.2 | அன்றாடம் உடற்பயிற்சிகளில் ஈடுபடுவார். | அன்றாட உடற்பயிற்சிகளில் விருப்பமின்றி ஈடுபடுவார். |

| தரம் 1 - சமயம் மற்றும் வழுமியக் கல்விச் சட்டகம் - இரண்டாம் தவணை | | | |
|---|---|---|---|
| கற்றல் பேறு | உள்ளடக்கம் | செயலாற்றல் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
| 1. எல்லா சந்தர்ப்பங்களிலும் முன்மாதிரி மிக்க மாணவனாக நடந்து கொள்வார். | முன்மாதிரி முஸ்லிம் மாணவன் | 1.1 வீட்டில் சிறந்த முன்மாதிரிகளை வெளிப்படுத்துவார் | 1.1.1 வீட்டில் நடந்து கொள்ளும் சிறந்த முன்மாதிரிகளை கூறுவார். |
| | வீடும் பாடசாலையும் | 1.2 பாடசாலையில் முன் மாதிரிமிக்க மாணவனாக செயற்படுவார். | 1.2.1 முன் மாதிரிமிக்க மாணவனாக பாடசாலையில் செயற்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்வார். |
| 2. பிறரின் தேவைகளை அறிந்து நற்கருமங்கள் செய்வார். | நற்கருமங்கள் | 2.1 நற்காரியங்கள் எவை என்பதை அறிந்து கூறுவார் | 2.1.1 பாடசாலையில் செய்யக்கூடிய நற்காரியங்கள் எவை என்பதை அறிந்து கூறுவார் |
| | | 2.2 தனக்கு வாய்க்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் நற்காரியங்களில் ஈடுபடுவார். | 2.2.1 நற்காரியங்களில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களைக் கூறுவார். |
| | | 2.3 நற்காரியங்கள் செய்வதன் சிறப்புக்களை முன்வைப்பார். | 2.3.1நற்காரியங்களில் ஈடுபடுவார். |
| 3. அன்றாட வாழ்வில் எப்போதும் உண்மை பேசுவார். | உண்மை பேசுதல் | 3.1 எப்போதும் உண்மை பேசுவார். | 3.1.1 உண்மை பேசிய சந்தர்ப்பங்களைக் கூறுவார். |
| | உண்மை பேசுவதன் பயன்கள் | 3.2 உண்மை பேசுவததால் ஏற்படும் நன்மைகளை முன்வைப்பார். | 3.2.1 உண்மை பேசுவதால் ஏற்படும் நன்மைகளை சக நண்பர்களுக்கு எடுத்துரைப்பார். |

| | | | |
|---|---|---|---|
| 4. மலக்குகளை விசுவாசித்து ஒழுகுவார். | மலக்குமார் | 4.1 பிரதான நான்கு மலக்குமார்களின் பெயர்களைக் குறிப்பிடுவார். | 4.1.1 முதல் நான்கு மலக்குமார்களின் பெயர்களைக் கூறுவார். |
| | மலக்குமார்களின் பிரதான பொறுப்புக்கள் | 4.2 அவர்களின் பிரதான பொறுப்புக்களைக் குறிப்பிடுவார். | 4.1.2 மலக்குமார்களின் பண்புகளைக் குறிப்பிடுவார். |
| 5. பிரதான நான்கு கலீபாக்களின் பெயர்களைக் குறிப்பிடுவார். | பிரதான நான்கு கலீபாக்களின் பெயர்கள் (அபூபக்கர் (ரழி) உமர் (ரழி) உஸ்மான் (ரழி) அலி (ரழி) | 5.1 பிரதான நான்கு கலீபாக்களின் பெயர்களைக் குறிப்பிடுவார் | 5.1.1 முதல் நான்கு கலீபாக்களின் பெயர்களை ஒழுங்குமுறைப்படி கூறுவார். |
| | உண்மைப் பேசுதல் | 5.2 உண்மை பேசிய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார். | 5.1.2 உண்மை பேச வேண்டும் என்பதை நண்பர்களுக்கு எடுத்துக் கூறுவார். |
| 6. மஸ்ஜித் புனிதமான இடம் என்பதை அறிந்து அதன் புனிதம் பேணுவார் | மஸ்ஜிதின் புனிதம் மஸ்ஜிதின் பகுதிகள் | 6.1 மஸ்ஜிதின் புனிதம் பற்றிக் குறிப்பிடுவார் | 6.1.1 மஸ்ஜிதை புனிதமாக வைக்கும் முறைகளைக் குறிப்பிடுவார் |
| | மஸ்ஜிதிற்குச் செல்லும் ஒழுங்குகள்.<br>மஸ்ஜிதில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் | 6.2 மஸ்ஜிதிற்குச் செல்லும் ஒழுங்குகளைக் குறிப்பிடுவார். | 6.2.1 மஸ்ஜிதிற்குச் செல்லும் ஒழுங்குகளை ஏனைய மாணவர்களுடன் கலந்துரையாடுவார். |
| 7. கழிவறையை முறையாகப் பயன்படுத்தி சுத்தமாக வைப்பார். | கழிவறை பயன்பாடு | 7.1 கழிவறை ஒழுங்குகளை பேணி அதனைப் பயன்படுத்துவார். | 7.1.1 கழிவறை ஒழுங்குகளைக் குறிப்பிடுவார் |
| | கழிவறை சுத்தம் | 7.2 கழிவறையை சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைப்பார். | 7.2.1 கழிவறையை சுத்தமாக வைக்கும் ஒழுங்குகளைக் குறிப்பிடுவார் |

| | | | |
|---|---|---|---|
| 8. உணவு உட்கொள்வதன் ஒழுங்குகளை அறிந்து பின்பற்றுவார். | உணவு உட்கொள்ள முன் | 8.1 உணவு உட்கொள்ள முன் பின்பற்ற வேண்டியவைகளைக் குறிப்பிடுவார். | 8.1.1 உணவு உட்கொள்ளும் முன் ஓதும் துஆவைக் குறிப்பிடுவார். |
| | உணவு உட்கொண்ட பின் | 8.2 உணவு உட்கொண்டதன் பின்னர் செய்ய வேண்டியவைகளைக் குறிப்பிடுவார். | 8.2.1 உணவு உட்கொண்டதன் பின்னர் ஓதும் துஆவைக் குறிப்பிடுவார். |

## பாட உள்ளடக்கம் - இரண்டாம் தவணை

1. நாம் நல்ல மாணவர்களாக இருப்போம்.

2. நற்காரியங்களில் ஈடுபடுவோம்.

3. நாம் உண்மை பேசுவோம்

4. மலக்குகளை ஈமான் கொள்வோம்.

5. பிரதான நான்கு கலீபாக்களை அறிந்து கொள்வோம்.

6. மஸ்ஜிதின் தூய்மையைப் பேணுவோம்.

7. சுத்தம் பேணுவோம்.

8. உணவு உண்போம்.

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 1 - நாம் நல்ல மாணவர்களாக இருப்போம்.**

எந்த சந்தர்ப்பத்திலும் மிகவும் சிறந்த முன்மாதிரிகளை வெளிக்காட்டும் நல்ல மாணவனாக திகழ வேண்டும் என்று இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 1. எல்லா சந்தர்ப்பங்களிலும் முன்மாதிரி மிக்க மாணவனாக நடந்து கொள்வார். | முன்மாதிரி முஸ்லிம் மாணவன் | 1.1 வீட்டில் சிறந்த முன்மாதிரிகளை வெளிப்படுத்துவார் | 1.1.1 வீட்டில் நடந்து கொள்ளும் சிறந்த முன்மாதிரிகளை கூறுவார். |
| | வீடும் பாடசாலையும் | 1.2 பாடசாலையில் முன் மாதிரிமிக்க மாணவனாக செயற்படுவார். | 1.2.1 முன் மாதிரிமிக்க மாணவனாக பாடசாலையில் செயற்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்வார். |

**கற்றல் வளங்கள்**

- வீட்டில் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் காட்சிகள்
- பாடசாலைச் சூழல் அடங்கிய காட்சிகள்.
- ஆசிரியர் வகுப்பறையில் நுழைகையில் மாணவர்கள் எழுந்து நிற்கும் காட்சி

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**
**படிமுறை 1**

- நான் நல்ல மாணவன்/ மாணவி

**சுயசரிதை**

1) எனது பெயர் (பிள்ளையின் உரிய பெயரை வெளிப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்)
2) நான் தரம் 1 இல் கற்கிறேன்.
3) தினமும் காலை 5 மணிக்கு நித்திரை விட்டு எழுவேன்.
4) காலைக்கடன்களை முடிப்பேன்.
5) பல்துலக்கி முகம் கழுவுவேன்.
6) தாயின் அருகில் அமர்ந்து அல் குர்ஆனை ஓதுவேன்.
7) பிஸ்மில்லாஹ் சொல்லி வலது கையால் தேநீர் குடிப்பேன்.

8) பாடசாலை செல்வதற்குத் தேவையான சகல பொருட்களையும் புத்தகப் பையில் இடுவேன்.
9) பெற்றோரை முத்தமிட்டு பாடசாலை செல்வேன்.
10) வகுப்பில் நன்றாக படிப்பேன்.

- மேற்படி சுயசரிதையை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களது அன்றாட செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- மேற்படி சுயசரிதைக்கு ஏற்ப தம்மைப் பற்றி தமது மொழி நடையில் கூற வழிப்படுத்துங்கள்
- செயற்பாடு 1 ஐச் செய்ய வழிப்படுத்துங்கள்.

**படிமுறை 2**

**பாடல்**

நான் நல்ல பிள்ளை

எல்லோரையும் மதிப்பேன்.

ஆசான் சொல்லைக் கேட்பேன்

பெற்றோர் அன்பைப் பெறுவேன்

எங்கள் நபி போல

பண்போடு நடப்பேன்.

- நான் நல்ல பிள்ளை என்ற பாடலை தாளத்துடன் பாடிக்காட்டுங்கள்.
- பாடலை மாணவர்களுடன் சேர்ந்து பாடுங்கள்.
- பாடலை மனனமிட்டுக் கூற வழிப்படுத்துங்கள்
- மாணவர்களை குழுக்களாக்கி பாட வழிப்படுத்துங்கள்.
- பாடலில் கூறப்பட்டுள்ள முன்மாதிரியான விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.
- வீட்டிலும் பாடசாலையிலும் மாணவர்கள் செய்யும் முன்மாதிரியான செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- செயற்பாடு 2, 3 ஐச் செய்ய வழிப்படுத்துங்கள்.

**படிமுறை 3**

- காட்சிப்படங்களை முன்வைத்து அவை தொடர்பில் கலந்துரையாடுங்கள்.
- முன்மாதிரியான செயல்களை எப்போதும் கடைபிடிக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் கூறும் பதில்களுக்கு ஏற்ப அவற்றை நெறிப்படுத்துங்கள்
- நான் வீட்டில் எந்தளவு நல்ல பிள்ளையாக உள்ளேன்?
- நான் பாடசாலையில் எந்தளவு நல்ல பிள்ளையாக உள்ளேன்?
- நான் வகுப்பறையில் எந்தளவு நல்ல பிள்ளையாக உள்ளேன்?

- போன்ற வினாக்களை முன்வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்
- 4, 5 ஆம் செயற்பாடுகளை செய்விக்க வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார் |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| வீட்டில் சிறந்த முன்மாதிரிகளை வெளிப்படுத்துவார். | 1.1.1 | வீட்டில் நடந்து கொள்ளும் சிறந்த முன்மாதிரிகள் மூன்றைக் கூறுவார். | வீட்டில் நடந்து கொள்ளும் சிறந்த முன்மாதிரி ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| பாடசாலையில் முன் மாதிரிமிக்க மாணவனாக செயற்படுவார். | 1.2.1 | பாடசாலையில் நடந்து கொள்ளும் சிறந்த முன்மாதிரிகள் மூன்றைக் கூறுவார். | பாடசாலையில் நடந்து கொள்ளும் சிறந்த முன்மாதிரி ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 2 - நற்காரியங்களில் ஈடுபடுவோம்.**

எல்லா நற்காரியங்களும் தர்மமாகும் என்பதை விளங்கி தனக்கு கிடைக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் முடியுமானளவு நற்காரியங்கள் செய்யும் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 2. பிறரின் தேவைகளை அறிந்து நற்கருமங்கள் செய்வார். | நற்கருமங்கள் | 2.1 நற்காரியங்கள் எவை என்பதை அறிந்து கூறுவார் | 2.1.1 பாடசாலையில் செய்யக்கூடிய நற்காரியங்கள் எவை என்பதை அறிந்து கூறுவார் |
| | | 2.2 தனக்கு வாய்க்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் நற்காரியங்களில் ஈடுபடுவார். | 2.2.1 நற்காரியங்களில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களைக் கூறுவார். |
| | | 2.3 நற்காரியங்கள் செய்வதன் சிறப்புக்களை முன்வைப்பார். | 2.3.1நற்காரியங்களில் ஈடுபடுவார். |

**கற்றல் வளங்கள்**

- நற்காரியங்கள் செய்வது தொடர்பான படங்கள்
- பிள்ளைக்கு உதவும் படம்.
- உடைந்த வீட்டில் வாழும் மனிதர்களுக்கு உதவும் படம்.
- யாசகம் கேட்கும் மனிதனுக்கு உதவும் படம்.
- வீதிச்சிறுவர்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- மேற்படி படங்களை ஒவ்வொன்றாகக் காண்பித்து கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களுடன் எமது அத்தியாவசியத் தேவைகள் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
- அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற முடியாதவர்களை இனங்காண சந்தர்ப்பம் கொடுங்கள்.
- தம்மிடம் மேலதிகமாக உள்ள பொருட்களை தேவை உடையோருக்கு வழங்குவதும்

தர்மம் எனக்கூறி நற்காரியங்கள் செய்யத் தூண்டுங்கள்.

- நற்காரியங்கள் செய்வது நன்மை தரத்தக்க விடயமாகும் என்பதை எடுத்துக்கூறுங்கள்.
- இதற்கு முன்னர் தர்மம் செய்த சந்தர்ப்பங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

படிமுறை 2

- சிறுவர்களாகிய நாம் வீட்டிலும் வகுப்பிலும் பிறருக்கு தர்மம் செய்யக்கூடிய பொருட்களையும் சந்தர்ப்பங்களையும் கேட்டறியுங்கள்
- காட்சிப்படம், காணொளி மற்றும் இறுவட்டுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி தர்மம் செய்தல் தொடர்பாக விளக்கம் கொடுங்கள்.
- தர்மம் செய்பவர்கள் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- தர்மம் செய்யும் சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தி மாணவர்களுக்கு தர்மம் செய்ய வழிகாட்டி ஊக்குவியுங்கள்.
- செயற்பாடு 1, 2, 3 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

படிமுறை 3.

- பிறருக்கு உதவுவதும் பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதும் தர்மம் ஆகும் என்பதை வலியுறுத்துங்கள்.
- தர்மம் செய்வது தொடர்பான முக்கியத்துவத்தை உணர்த்தும் பொருத்தமான கதை ஒன்றை முன்வையுங்கள்
- (உதாரணம்) நபி (ஸல்)அவர்கள் பெருநாள் தொழுகைக்கு அழைத்துச் சென்ற அநாதைச் சிறுவனின் கதை
- மேற்படி கதை கூறும் படிப்பினைகள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- செயற்பாடு 4 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார் |
|---|---|---|---|
| | | நிலை 2 | நிலை 1 |
| நற்காரியங்கள் எவை என்பதை அறிந்து கூறுவார் | 2.1.1 | நற்காரியங்களில் ஈடுபட்ட மூன்று சந்தர்ப்பங்களைக் கூறுவார். | நற்காரியங்களில் ஈடுபட்ட சந்தர்ப்பங்கள் ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| தனக்கு வாய்க்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் நற்காரியங்களில் ஈடுபடுவார். | 2.2.1 | தனக்கு வாய்க்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் நற்காரியமாற்றுவார். | தனக்கு வாய்க்கும் எந்த சந்தர்ப்பத்திலும் நற்காரியங்களை செய்ய இடர்ப்படுவார். |
| நற்காரியங்கள் செய்வதன் சிறப்புக்களை முன்வைப்பார். | 2.3.1 | நற்காரியங்கள் ஆற்றுவதன் சிறப்புக்கள் மூன்றை முன்வைப்பார். | நற்காரியங்கள் ஆற்றுவதன் சிறப்புக்களில் ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 3 - நாம் உண்மை பேசுவோம்**

நபியவர்களது அருங்குணங்கள் பற்றி அறிந்து வாழ்வின் எல்லா நிலைமைகளிலும் உண்மையை மட்டுமே பேசும் தன்மையை வழக்கமாக்கிக் கொண்ட மாணவனாக நாம் மாற வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 3. அன்றாட வாழ்வில் எப்போதும் உண்மை பேசுவார். | உண்மை பேசுதல் | 3.1 எப்போதும் உண்மை பேசுவார். | 3.1.1 உண்மை பேசிய சந்தர்ப்பங்களைக் கூறுவார். |
| | உண்மை பேசுவதன் பயன்கள் | 3.2 உண்மை பேசுவததால் ஏற்படும் நன்மைகளை முன்வைப்பார். | 3.2.1 உண்மை பேசுவதால் ஏற்படும் நன்மைகளை சக நண்பர்களுக்கு எடுத்துரைப்பார். |

**கற்றல் வளங்கள்**

- உரையாடலுக்கு அவசியமான முகமூடிகள்
- உரையாடல் அட்டைகள் (தந்தை-மகன்)
- பொருத்தமான வரலாற்றுக் கதைகள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**
கீழ்வரும் உரையாடலை முகமூடிகள் அணிந்தவாறு மாணவர்கள் நடித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.

## உரையாடல்

- மகன் :அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு .
- தந்தை :வஅலைக்குஸ்ஸலாம் அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு.
- தந்தை :வாருங்கள் மகன், என்ன சிரித்துக்கொண்டே வாறீங்க? கையில் என்ன அது? ஒரு பொதி உள்ளது?
- மகன் :வாப்பா.இதோ பாருங்கள். எனக்கு காலைக்கூட்டத்தில் அதிபர் ஒரு பரிசு தந்தார்.

- தந்தை :எதுக்கு மகன் பரிசு? அது பற்றி சொல்லுங்களேன்.
- மகன் :உண்மை பேசும் மாணவனுக்கான பரிசே அது. அதனைத்தான் அதிபர் எனக்குத் தந்தார் எல்லோரும் கைதட்டி என்னை மகிழ்வித்தனர். நானும் மிகவும் மகிழ்வாக உள்ளேன்.
- தந்தை :மாஷா அல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ் இதனைக் கேட்கவே மகிழ்ச்சியாக உள்ளது.
- (மகனை கட்டி அணைத்து முத்தமிடுகிறார்)எப்போதும் உண்மை பேசி நடந்தால் பரிசு கிடைக்கும். அல்லாஹ் சுவனத்தை தருவான்.

படிமுறை 2

- உண்மை பேசுவதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து கலந்துரையாடுங்கள்
- பொய் பேசுவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து கலந்துரையாடுங்கள்
- உண்மை பேசியதால் மாணவர்கள் பாராட்டப்பட்ட சந்தர்ப்பங்களை கேட்டறியுங்கள்.
- (அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் கதை)

படிமுறை 3

- உண்மை பேசுவது சம்பந்தமான மேற்படி சிறிய கதையை மாணவர்கள் நடித்துக்காட்ட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கதை கூறும் படிப்பினைகள் பற்றி கலந்துரையாடுங்கள்.
- உண்மை கூறுவது தொடர்பாக மாணவர்கள் தெரிந்து வைத்துள்ள கதைகளைக் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு:**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| எப்போதும் உண்மை பேசுவார். | 3.1.1 | எல்லா சந்தர்ப்பங்களிலும் உண்மை பேசுவார். | உண்மை பேச தயங்குவார் |
| உண்மை பேசுவததால் ஏற்படும் நன்மைகளை முன்வைப்பார். | 3.2.1 | உண்மை பேசுவதன் பயன்கள் மூன்றைக் கூறுவார். | உண்மை பேசுவதன் பயன் ஒன்றை யேனும் கூற சிரமப்படுவார். |

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 4 - மலக்குகளை ஈமான் கொள்வோம்**

மலக்குகளை அல்லாஹ் ஒளியால் படைத்துள்ளான் என்றும் அவர்கள் வேறுபட்ட ஓர் உலகில் வாழ்கிறார்கள் என்பதையும் அறிந்து அவர்கள் பற்றிய விசுவாசத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 4. மலக்குகளை விசுவாசித்து ஒழுகுவார். | மலக்குமார் | 4.1 பிரதான நான்கு மலக்குமார்களின் பெயர்களைக் குறிப்பிடுவார். | 4.1.1 முதல் நான்கு மலக்குமார்களின் பெயர்களைக் கூறுவார். |
| | மலக்குமார்களின் பிரதான பொறுப்புக்கள் | 4.2 அவர்களின் பிரதான பொறுப்புக்களைக் குறிப்பிடுவார். | 4.1.2 மலக்குமார்களின் பண்புகளைக் குறிப்பிடுவார். |

**கற்றல் வளங்கள்**

- முதல் நான்கு மலக்குமார்களின் பெயர்கள்.
- அவர்களது பணிகள் எழுதப்பட்ட தனித்தனி அட்டைகள்
- “அல்லாஹ்வை ஈமான் கொண்டோம்”
- “மலக்குகளை ஈமான் கொண்டோம்” எனும் அட்டைகள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- மாணவர்களை அமைதியான சூழலுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- அல்லாஹ்வை ஈமான் கொண்டோம், மலக்குகளை ஈமான் கொண்டோம் எனும் அட்டைகளை காட்சிப்படுத்தி வாசித்துக் காட்டுங்கள்.
- அவை குறித்து கலந்துரையாடுங்கள்.

**படிமுறை 2**

- பிரதான நான்கு மலக்குமார்களின் பெயர்களையும் பணிகளையும் எழுதிய தனித்தனி அட்டைகளை மாணவர்களுக்கு தென்படும் வகையில் சுவரில் தொங்க விட்டு காட்சிப்படுத்துங்கள்.
- மலக்குமார்களின் பெயரை முதலில் கூறுங்கள்.
- அடுத்து அவர்களது பணியைக் கூறுங்கள்.

- கூறியவற்றை செவிமடுக்க விட்டு மாணவர்களிடம் அவற்றை மீளவும் கூறுமாறு வினவுங்கள்.
- இஸ்ராஈல் (அலை) அவர்களை "மலக்குல் மௌத்" என்று அழைப்பார்கள் என்பதை நினைவுபடுத்துங்கள்.
- மாணவர்களை இரண்டு குழுக்களாக்குங்கள். ஒரு குழுவுக்கு மலக்குமார்களின் பெயரை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள். அடுத்த குழு பெயர் கூறப்படும் மலக்குமார்களின் பணியைக் கூற வழிப்படுத்துங்கள்.

படிமுறை 3

- அல்லாஹ்வின் படைப்புகள் குறித்து கேட்டறியுங்கள்.
- மலக்குகள் கண்ணுக்கு விளங்காத படைப்புகள் என்பதை எடுத்துக்கூறுங்கள்.
- மலக்குகளை அல்லாஹ் ஒளியால் படைத்துள்ளான் என்று கூறுங்கள்.
- அவர்களை நாம் நம்ப வேண்டியது ஈமானை சார்ந்தது என்று விளக்கமளியுங்கள்.

படிமுறை 4

- கீழே தரப்பட்ட வகையில் மலக்குமார் தொடர்பான பொதுவான சில அடிப்படைத் தகவல்களை முன்வையுங்கள்.
- ஒளியால் படைக்கப்பட்டவர்கள்
- ஆண் பெண் வேறுபாடு இல்லை
- அல்லாஹ்வின் கட்டளைகளை எப்போதும் செயற்படுத்துவார்கள்
- மனிதர்கள் போல நடந்து கொள்வதில்லை.
- வானத்திலும் பூமியிலும் உள்ளனர்.

**கணிப்பீடு:**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| பிரதான நான்கு மலக்குமார்களின் பெயர்களைக் குறிப்பிடுவார். | 4.1.1 | பிரதான நான்கு மலக்குமார்களில் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுவார். | பிரதான நான்கு மலக்குமார்களில் ஒருவரையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| பிரதான நான்கு மலக்குமார்களின் பணிகளைக் குறிப்பிடுவார். | 4.2.1 | பிரதான நான்கு மலக்குமார்களில் மூவரின் பணிகளைக் குறிப்பிடுவார். | பிரதான நான்கு மலக்குமார்களில் ஒருவரின் பணியையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 5 - பிரதான நான்கு கலீபாக்களை அறிந்து கொள்வோம்.**

நபியவர்களின் மரணத்தின் பிறகு சமூகத்துக்கு தலைமை வழங்கிய பிரதான நான்கு நபித்தோழர்களே நான்கு கலீபாக்களும் என்பதை தெரிந்து அவர்கள் பற்றிய அறிமுகத்தை விருத்தி செய்ய வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 5. பிரதான நான்கு கலீபாக்களின் பெயர்களைக் குறிப்பிடுவார். | பிரதான நான்கு கலீபாக்களின் பெயர்கள் (அபூபக்கர் (ரழி) உமர் (ரழி) உஸ்மான் (ரழி) அலி (ரழி) | 5.1 பிரதான நான்கு கலீபாக்களின் பெயர்களைக் குறிப்பிடுவார் | 5.1.1 முதல் நான்கு கலீபாக்களின் பெயர்களை ஒழுங்குமுறைப்படி கூறுவார். |
| | உண்மைப் பேசுதல் | 5.2 உண்மை பேசிய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார். | 5.1.2 உண்மை பேச வேண்டும் என்பதை நண்பர்களுக்கு எடுத்துக் கூறுவார். |

**கற்றல் வளங்கள்**

- நான்கு கலீபாக்களதும் பெயர்கள் தனித்தனியாக எழுதப்பட்ட அட்டைகள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- நபியவர்களின் மரணத்தின் பின்னர் இஸ்லாமிய உலகிற்கு தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்கள் கலீபாக்கள் என அழைக்கப்படுவார்கள் என்பதை எடுத்துக்கூறுங்கள்.
- முதல் நான்கு கலீபாக்களின் பெயர்களை ஒழுங்கு முறைப்படி எடுத்துக் கூறுங்கள்.
- அவர்கள் நால்வரும் நபியவர்களுடன் மிகவும் நெருக்கமாக, நேசமாக இருந்தவர்கள் என்பதை எடுத்துக் கூறுங்கள்.
- மேற்படி நான்கு கலீபாக்களும் எல்லா சந்தர்ப்பங்களிலும் நபியவர்களை நேசித்து அவர்களைப் பின்பற்றி நடந்தார்கள் என்பதை நினைவூட்டுங்கள்.
- செயற்பாடு 1 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

படிமுறை 2

- கலீபாக்களின் பெயர்கள் எழுதப்பட்ட அட்டைகளை தனித்தனியாக காண்பித்து பெயர்களை உச்சரித்துக்காட்டுங்கள்.
- அவர்களின் பெயர்களை கூறும் போது ரழியல்லாஹூ "அன்ஹூ" என்று கட்டாயம் கூற வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
- அவர்களிடம் காணப்பட்ட உயர்ந்த குணங்கள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- செயற்பாடு 2 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| பிரதான நான்கு கலீபாக்களின் பெயர்களைக் குறிப்பிடுவார். | 5.1.1 | பிரதான கலீபாக்கள் நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுவார். | பிரதான கலீபாக்களில் ஒருவரையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| உண்மை பேசிய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார். | 5.2.1 | உண்மை பேசிய சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுவார். | உண்மை பேசிய சந்தர்ப்பமொன்றைக் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 6 - மஸ்ஜிதின் தூய்மை பேணுவோம்**

மஸ்ஜித் இறையில்லம் ஆகும். அதன் புனிதத்தை எல்லா நிலையிலும் பேணி அதன் தூய்மையைப் பாதுகாக்க பங்களிக்க வேண்டும். அதில் நுழைகையில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகளை பேணவும் வேண்டும் என இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 6. மஸ்ஜித் புனிதமான இடம் என்பதை அறிந்து அதன் புனிதம் பேணுவார் | மஸ்ஜிதின் புனிதம் மஸ்ஜிதின் பகுதிகள் | 6.1 மஸ்ஜிதின் புனிதம் பற்றிக் குறிப்பிடுவார் | 6.1.1 மஸ்ஜிதை புனிதமாக வைக்கும் முறைகளைக் குறிப்பிடுவார் |
| | மஸ்ஜிதிற்குச் செல்லும் ஒழுங்குகள்.<br>மஸ்ஜிதில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் | 6.2 மஸ்ஜிதிற்குச் செல்லும் ஒழுங்குகளைக் குறிப்பிடுவார். | 6.2.1 மஸ்ஜிதிற்குச் செல்லும் ஒழுங்குகளை ஏனைய மாணவர்களுடன் கலந்துரையாடுவார். |

**கற்றல் வளங்கள்**

- வெவ்வேறு மஸ்ஜித்களின் படங்கள்.
- பாடசாலைக்கு அருகில் உள்ள பிரதான மஸ்ஜித்
- மஸ்ஜிதின் வெளித்தோற்றம்
- மஸ்ஜிதின் உள் தோற்றம்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- மஸ்ஜிதுக்கு செல்லும் வகையில் தயாராக வருமாறு மாணவர்களுக்கு முன்னறிவித்தல் வழங்குங்கள்.
- அருகில் உள்ள பிரதான மஸ்ஜிதுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மஸ்ஜித் புனிதமான இடம் என்பதையும் அங்கு அமைதி பேண வேண்டும் என்பதையும் வலியுறுத்துங்கள்.
- சுத்தமான ஆடையுடன் மஸ்ஜிதில் நுழைய வேண்டும் என்பதை எடுத்துக் கூறுங்கள்.

- மஸ்ஜித் அல்லாஹ்வின் மாளிகை என்பதை எடுத்துக் கூறி அங்கு ஒழுக்கம் பேணி அமைதியாக இருந்து வணக்கங்கள் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்துங்கள்.
- மஸ்ஜிதை பார்வையிட்ட பின் கிடைத்த அனுபவங்கள் குறித்து கலந்துரையாடுங்கள்
- மூத்தவர்களுடன் மஸ்ஜிதுக்குச் சென்ற அனுபவம் உள்ள மாணவர்கள் அவை குறித்து முன்வைக்க சந்தர்ப்பம் கொடுங்கள்.
- வீட்டிலிருந்து மஸ்ஜிதுக்குச் செல்லும் ஒழுங்குகள் குறித்து முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள் (சுத்தமாக செல்லல், முகக்கவசம், தொழுகை விரிப்பு)
- செயற்பாடு 1 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

படிமுறை 2

- மஸ்ஜிதின் வேறுபட்ட இடங்களைப் பார்வையிட சந்தர்ப்பம் வழங்குங்கள். (மிம்பர், மிஹ்ராப், மினாரா, ஹௌல்)
- அவை ஒவ்வொன்றிலும் உள்ள வேறுபாடுகளை இனங்காண சந்தர்ப்பம் கொடுங்கள்.
- மேற்குறிப்பிட்ட விசேட இடங்களில் நடைபெறும் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடி விளக்கமளியுங்கள்.
- அவற்றின் கலையம்சங்களை ரசிக்க வழிப்படுத்துங்கள்.
- அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற மனோ நிலையை ஏற்படுத்துங்கள்.
- ஏனைய சமய தலங்களையும் மதிக்க வேண்டும் பாதுகாக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறுங்கள்.
- மஸ்ஜிதுக்கு செல்லும் முன் கவனம் செலுத்த வேண்டிய கீழ்வரும் விடயங்கள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- (அதான் கூறியதும் பள்ளிக்கு செல்லல், தூய ஆடையுடன் செல்லல், வுழுவுடன் செல்லல் மணம் பூசி செல்லல், வலது பக்கத்தால் செல்லல்.

படிமுறை 3

- மஸ்ஜிதின் புனிதம் பேணத்தக்க வகையில் பின்வரும் விடயங்கள் குறித்து கலந்துரையாடுங்கள்
- மஸ்ஜிதின் உள் சுத்தம்.
- மஸ்ஜிதின் வெளிச்சுத்தம்.
- பிறருக்கு இடைஞ்சல் இல்லாமல் இருத்தல்.
- அமைதியாக இருந்து அல்குர்ஆன் ஓதுதல்.
- செயற்பாடு 3 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார் |
|---|---|---|---|
| | | நிலை 2 | நிலை 1 |
| மஸ்ஜிதின் புனிதம் பற்றிக் குறிப்பிடுவார் | 6.1.1 | மஸ்ஜிதின் புனிதம் பற்றி மூன்று விடயங்களைக் குறிப்பிடுவார் | மஸ்ஜிதின் புனிதம் பற்றி ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| மஸ்ஜிதிற்குச் செல்லும் ஒழுங்குகளைக் குறிப்பிடுவார். | 6.2.1 | மஸ்ஜிதிற்குச் செல்லும் போது பேண வேண்டிய ஒழுங்குகள் மூன்றைக் குறிப்பிடுவார். | மஸ்ஜிதிற்குச் செல்லும் போது பேண வேண்டிய ஒழுங்குகள் பற்றி ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 7 - சுத்தம் பேணுவோம்**

வீட்டிலும் பொது இடங்களிலும் கழிவறை ஒழுங்குகளைப் பேணி சுத்தமாகவும் நேர்த்தியாகவும் நடத்து கொள்ள வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 7. கழிவறையை முறையாகப் பயன்படுத்தி சுத்தமாக வைப்பார். | கழிவறை பயன்பாடு | 7.1 கழிவறை ஒழுங்குகளை பேணி அதனைப் பயன்படுத்துவார். | 7.1.1 கழிவறை ஒழுங்குகளைக் குறிப்பிடுவார் |
| | கழிவறை சுத்தம் | 7.2 கழிவறையை சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைப்பார். | 7.2.1 கழிவறையை சுத்தமாக வைக்கும் ஒழுங்குகளைக் குறிப்பிடுவார் |

**கற்றல் வளங்கள்**

- கழிவறைக்கு உரிய குறியீடுகள் (ஆண்/பெண்)
- கழிவறையை காட்டும் மாதிரி படங்கள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- மாணவர்களை மிகவும் பொருத்தமான வெளிச் சூழலுக்கு அழைத்துச் செல்லுங்கள்
- குறியீடுகளை காண்பித்து அவற்றின் மூலம் நாடப்படும் இடங்கள் குறித்து கலந்துரையா-டுங்கள்.
- எமது பாடசாலையில் கழிவறை அமைந்துள்ள இடம் குறித்து வினவுங்கள்.
- வீட்டில் உள்ள கழிவறையின் தன்மை குறித்து வினவுங்கள் .
- கழிவறைக்கு நுழையும் போதும் வெளிவரும் போதும் கூற வேண்டிய சந்தர்ப்ப துஆக்களை நினைவுபடுத்துங்கள்.

படிமுறை 2

- கழிவறை செல்வதன் ஒழுங்குகள் குறித்து சில படங்களை காண்பித்து அவை குறித்து கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களை குழுக்களாக்கி கழிவறை செல்வதன் ஒழுங்குகளை காட்டும் காட்சிப்படங்களை காண்பித்து அவற்றை ஒழங்கு முறைப்படி கூற வழிப்படுத்துங்கள்
- 1,2 ஆம் செயற்பாட்டை மேற்கொள்ள வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| கழிவறை ஒழுங்குகளை பேணி அதனை பயன்படுத்துவார். | 7.1.1 | கழிவறை ஒழுங்குகள் மூன்றைக் குறிப்பிடுவார் | கழிவறை ஒழுங்குகள் ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| கழிவறையை சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைப்பார். | 7.2.1 | கழிவறையை சுத்தமாக வைக்கும் ஒழுங்குகள் மூன்றைக் குறிப்பிடுவார். | கழிவறையை சுத்தமாக வைக்கும் ஒழுங்குகள் ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 8 - உணவு உண்போம்.**

நாம் உயிர்வாழ உணவு மிக முக்கியம் . எமக்கு உணவளிப்பவன் அல்லாஹ் . நாம் உணவு உட்கொள்ளும் போது நபிகளார் காட்டித் தந்த ஒழுங்குகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 8. உணவு உட்கொள்வதன் ஒழுங்குகளை அறிந்து பின்பற்றுவார். | உணவு உட்கொள்ள முன் | 8.1 உணவு உட்கொள்ள முன் பின்பற்ற வேண்டியவைகளைக் குறிப்பிடுவார். | 8.1.1 உணவு உட்கொள்ளும் முன் ஓதும் துஆவைக் குறிப்பிடுவார். |
| | உணவு உட்கொண்ட பின் | 8.2 உணவு உட்கொண்டதன் பின்னர் செய்ய வேண்டியவைகளைக் குறிப்பிடுவார். | 8.2.1 உணவு உட்கொண்டதன் பின்னர் ஓதும் துஆவைக் குறிப்பிடுவார். |

**கற்றல் வளங்கள்**

- உணவு உட்கொள்வதன் ஒழுங்குகள் எழுதப்பட்ட தனித்தனி அட்டைகள்.
- உணவு உட்கொள்ள முன்னரும் உட்கொண்டதன் பின்னரும் ஓதும் துஆக்கள் எழுதப்பட்ட தனித்தனி அட்டைகள்.
- அழகிய முறையில் உணவு கொள்ளும் காட்சிப் படங்கள்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**
**படிமுறை 1**

- கீழ் வரும் வினாக்களை மாணவர்களிடம் வினவுங்கள்.
  1) நாம் உயிர் வாழ அவசியமானவை எவை?
  2) எமக்கு உணவளிப்பவன் யார்?
  3) எமது உணவு எப்படி அமைய வேண்டும்?
  4) உணவு உண்பதன் ஒழுங்குகள் என்ன? போன்றவற்றை வினவி மாணவர்கள் முன்வைக்கும் விடைகளுக்கேற்ப கலந்துரையாடுங்கள்.
  5) உணவை வீண் விரயமாக்காமல் உண்ண வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
  6) செயற்பாடு 1 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

படிமுறை 2

- நபி அவர்கள் முழு வாழ்விற்கும் வழிகாட்டியுள்ளார்கள். நாம் வாழ உணவு தேவை. உணவளிப்பவன் அல்லாஹ். எனவே எமக்கு இஸ்லாம் உணவு உண்பதன் ஒழுங்குகளை சொல்லித்தந்திருக்கின்றது என்பது குறித்து கலந்துரையாடுங்கள்.

1. உணவு உட்கொள்ள முன் கைகளைக் கழுவிக் கொள்ள வேண்டும்.
2. உண்ணும் போதும் பருகும் போதும் பிஸ்மில்லாஹ் சொல்ல வேண்டும்.
3. முறையாக அமர்ந்து உண்ண வேண்டும்.
4. தேவையான அளவை மாத்திரம் உண்ண வேண்டும்.
5. அது வீண் விரயத்தைத் தவிர்க்கும்.
6. வீட்டில் உண்ணும் போது கூட்டாக உண்ண வேண்டும்.
7. சபையில் உணவு உண்ணும் போது சபை ஒழுங்குகளைப் பேண வேண்டும்.
8. உண்டு பருகி முடிந்ததும் அல்ஹம்து லில்லாஹ் என்று கூற வேண்டும்.
9. இவை தவிர மேலதிக ஒழுங்குகளை மாணவர்களோடு கலந்துரையாடுங்கள்
10. செயற்பாடு 2 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| உணவு உட்கொள்ள முன் பின்பற்ற வேண்டியவைகளைக் குறிப்பிடுவார். | 7.1.1 | உணவு உட்கொள்ள முன் பின்பற்ற வேண்டிய விடயங்கள் மூன்றைக் குறிப்பிடுவார் | உணவு உட்கொள்ள முன் பின்பற்ற வேண்டிய விடயங்கள் ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| உணவு உட்கொள்ள முன்னரும் உட்கொண்டதன் பின்னரும் கூற வேண்டிய துஆக்களைக் குறிப்பிடுவார். | 7.2.1 | மேற்படி இரண்டு துஆக்களையும் குறிப்பிடுவார் | மேற்படி துஆக்களில் ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

| தரம் 1 - சமயம் மற்றும் விழுமியக் கல்விச் சட்டகம் - மூன்றாம் தவணை | | | |
|---|---|---|---|
| **கற்றல் பேறு** | **உள்ளடக்கம்** | **செயலாற்றல் தர நியமங்கள்** | **கணிப்பீட்டு நியதி** |
| 1. நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் சிறப்புப் பெயர்களை அறிந்து கூறுவார். | அஸ்ஸாதிக் | 1.1 நபியவர்களது சிறப்புப் பெயரான அஸ்ஸாதிக் பற்றி குறிப்பிடுவார். | 1.1.1 மாணவர்கள் உண்மை பேசிய சந்தர்ப்பம் ஒன்றைக் குறிப்பிடுவார். |
| | அல் அமீன் | 2.2 நபியவர்களது சிறப்புப் பெயரான அல் அமீன் பற்றி குறிப்பிடுவார். | 1.2.1 மாணவர்கள் நம்பிக்கையோடு நடந்து கொண்ட சந்தர்ப்பம் ஒன்றைக் ஒன்றைக் குறிப்பிடுவார். |
| 2. உலகில் தோன்றிய முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்கள் என்று அறிந்து கூறுவார். | முதல் மனிதன் ஆதம் | 2.1 உலகில் தோன்றிய முதல் மனிதன் குறித்து கூறுவார். | 2.1.1 ஆதம் நபி பற்றி கூறுவார். |
| | மனித படைப்பு | 2.2 முதல் மனிதன் படைக்கப்பட்டது குறித்து கூறுவார். | 2.2.1 முதல் மனிதன் படைக்கப்பட்ட விதம் பற்றி கூறுவார் |

| | | | |
|---|---|---|---|
| 3. இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் என்பதை அறிந்து அவரது முன்மாதிரிகளை வாழ்வில் பின்பற்றி நடப்பார். | நபி அவர்களின் சுயசரிதை | 3.1 இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்வு குறித்த பாடலை மையப்படுத்தி கருத்துரைப்பார். | 3.1.1 நபி அவர்களது வரலாற்றை சுருக்கமாக முன்வைப்பார். |
| | புனித மக்கா, புனித மதீனா, க.்.பதுல்லாஹ், மஸ்ஜிதுன் நபவி | 3.2 நபியவர்கள் வாழ்ந்த மக்கா மற்றும் மதீனா தொடர்பாக கருத்துரைப்பார். | 3.2.1 க.்.பதுல்லாஹ், மஸ்ஜிதுன் நபவி பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுவார். |
| | அல்குர்ஆன் அருளப்படுதல் | 3.3 அல் குர்ஆன் அருளப்பட்ட சம்பவத்தை முன்வைப்பார். | 3.3.1 இறுதிவேதம் அல்குர்ஆன் பற்றிக் குறிப்பிடுவார். |
| 4. பெருநாள் கொண்டாட் டங்களை அறிந்து அத்தினத்தில் சந்தோசத்தை வெளிப்படுத்துவார். | ஈதுல் பித்ர் - நோன்புப் பெருநாள்<br><br>ஈதுல் அழ்ஹா - ஹஜ் பெருநாள் | 4.1 முஸ்லிம்களின் பெருநாள் பற்றி குறிப்பிடுவார். | 4.1.1 பெருநாள் கொண்டாட்டத்தின் சந்தோசத்தை வெளிப்படுத்துவார். |
| | பெருநாள் விசேடங்கள் | 4.2 பெருநாள் விசேடங்கள் குறித்து கூறுவார். | 4.2.1 பெருநாளில் மேற்கொள்ளும் விசேட செயற்பாடுகளை விபரிப்பார். |
| 5. பாடசாலையின் அழகைப் பேணிப் பாதுகாத்து வருவார். | பாடசாலையின் சுத்தமும் நேர்த்தியும் | 5.1 பாடசாலையும் புனிதமாகவும் சுத்தமாகவும் இருக்க வேண்டிய இடம் என்பதை எடுத்துக் கூறுவார். | 5.1.1 பாடசாலையின் சுத்தம் பேணுவதன் அவசியத்தை குறிப்பிடுவார். |
| | அழகான பாடசாலை | 5.2 பாடசாலையின் அழகை தொடர்ந்தும் பேணி நடப்பார். | 5.2.1 பாடசாலையை அழகுபடுத்தும் முறைகளைக் கூறுவார். |

| | | | |
|---|---|---|---|
| 6. நித்திரையின் ஒழுங்கு முறைகளை பேணி தூங்குவார். | நித்திரையின் ஒழுங்கு | 6.1 நித்திரையின் ஒழுங்குகள் குறித்து குறிப்பிடுவார். | 6.1.1 நித்திரையின் ஒழுங்குகளை வரிசைப்படுத்துவார். |
| | சந்தர்ப்ப துஆக்கள். | 6.2 நித்திரை கொள்ளும் போது ஓத வேண்டிய துஆவை பொருளுடன் ஓதுவார். | 6.2.1 நித்திரை கொள்ளும் முன் உரிய துஆவை ஓதுவார். |
| 7. எல்லா சந்தர்ப்பங்களிலும் மூத்தவர்களுக்கு அன்புடன் மரியாதை செய்வார். | முதியோரை நேசித்தல். | 7.1 மூத்தவர்களை நேசிக்க வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிடுவார். | 7.1.1 மூத்தவர்களுக்கு அன்பு காட்டிய சந்தர்ப்பங்களை முன்வைப்பார். |
| | மூத்தவர்களுக்கு மரியாதை செய்தல். | 7.2 மூத்தவர்களை மரியாதை செய்ய வேண்டிய அவசியத்தை விபரிப்பார். | 7.2.1 மூத்தவர்களுக்கு மரியாதை செய்த சந்தர்ப்பங்களை முன்வைப்பார். |

**பாட உள்ளடக்கம் - மூன்றாம் தவணை**

1. நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் சிறப்புப் பெயர்களை அறிந்து கொள்வோம்
2. முதல் மனிதன் நபி ஆதம் (அலை) அவர்கள்
3. இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்
4. எமது பெருநாட்களைக் கொண்டாடுவோம்
5. எமது பாடசாலையை அழகுபடுத்துவோம்
6. நித்திரையின் ஒழுங்குகள்
7. மூத்தோரை மதிப்போம்

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 1 - நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் சிறப்புப் பெயர்கள்**

எமது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இறுதி நபி என்பதை அறிந்து அவருக்கு வழங்கப்பட்ட விசேட சிறப்புப் பெயர்களையும் அறிந்து அவற்றின் படி தன் வாழ்விலும் நடந்து கொள்ள வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 1. நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் சிறப்புப் பெயர்களை அறிந்து கூறுவார். | அஸ்ஸாதிக் | 1.1 நபியவர்களது சிறப்புப் பெயரான அஸ்ஸாதிக் பற்றி குறிப்பிடுவார். | 1.1.1 மாணவர்கள் உண்மை பேசிய சந்தர்ப்பம் ஒன்றைக் குறிப்பிடுவார். |
| | அல் அமீன் | 2.2 நபியவர்களது சிறப்புப் பெயரான அல் அமீன் பற்றி குறிப்பிடுவார். | 1.2.1 மாணவர்கள் நம்பிக்கையோடு நடந்து கொண்ட சந்தர்ப்பம் ஒன்றைக் ஒன்றைக் குறிப்பிடுவார். |

**கற்றல் வளங்கள்**

- நபி முஹம்மத் (ஸல்) அவர்களது சிறப்புப் பெயர்கள் அரபு மொழியில் எழுதப்பட்ட அட்டைகள் (அஸ்ஸாதிக் **اَلصَّادِقُ** அல் அமீன் **اَلْأَمِيْنُ** )
- பொருத்தமான வரலாற்றுக்கதை (இறுவட்டு / காணொளி)

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- நபி முஹம்மத் (ஸல்) அவர்களது சிறப்புப் பெயர்களை விபரிக்கும் வகையில் சிறுவர்களுக்கு மிகவும் பொருத்தமான சம்பவங்கள் சிலவற்றை சேகரித்து குறைந்தது இரண்டைப் பற்றி கலந்துரையாடுங்கள்.
- சம்பவங்கள் கூறும் படிப்பினைகள் குறித்து வினவுங்கள்

படிமுறை 2

- நபி முஹம்மத் (ஸல்) அவர்களது சிறப்புப் பெயர்களின் பொருளை அழகுற உச்சரித்துக்காட்டி அவற்றின் பொருளை எடுத்துக்கூறுங்கள்.

படிமுறை 3

- மாணவர்களை வெளியில் அழைத்துச் செல்லுங்கள்.
- அவர்களை நான்கு குழுக்களாக்குங்கள்.
- முதல் இரண்டு குழுக்களுக்கும் அரபு மொழியில் எழுதப்பட்ட சொல்லட்டையை வழங்குங்கள்.
- அடுத்த இரண்டு குழுக்களுக்கும் அவற்றின் பொருளட்டையை வழங்குங்கள்.
- அரபு மொழியை ஆசிரியர் உச்சரித்துக் காட்டுங்கள்.
- அதன் பொருளை மாணவர்கள் உச்சரிக்க வழிப்படுத்துங்கள்.
- நான்கு குழுக்களும் மாறி மாறி அரபு மொழியை உச்சரிக்கவும் அவற்றின் பொருளை சரியாக கூறவும் வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| நபியவர்களது சிறப்புப் பெயரான அஸ்ஸாதிக் பற்றி குறிப்பிடுவார். | 1.1.1 | உண்மை உரைத்த சந்தர்ப்பம் ஒன்றையேனும் குறிப்பிடுவார். | உண்மை உரைத்த சந்தர்ப்பம் ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| நபியவர்களது சிறப்புப் பெயரான அல் அமீன் பற்றி குறிப்பிடுவார். | 2.2.1 | நம்பிக்யையுடன் நடந்து கொண்ட சந்தர்ப்பம் ஒன்றையேனும் குறிப்பிடுவார். | நம்பிக்யையுடன் நடந்து கொண்ட சந்தர்ப்பம் ஒன்றையேனும் கூற கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 2 - முதல் நபி ஆதம் (அலை) அவர்கள்**

உலகில் பிறந்த முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்களே முதலாவது நபியாகவும் இருந்தார்கள் என்பதை மாணவர்கள் ஏற்று நடக்க வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 2. உலகில் தோன்றிய முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்கள் என்று அறிந்து கூறுவார். | முதல் மனிதன் ஆதம் | 2.1 உலகில் தோன்றிய முதல் மனிதன் குறித்து கூறுவார். | 2.1.1 ஆதம் நபி பற்றி கூறுவார். |
| | மனித படைப்பு | 2.2 முதல் மனிதன் படைக்கப்பட்டது குறித்து கூறுவார். | 2.2.1 முதல் மனிதன் படைக்கப்பட்ட விதம் பற்றி கூறுவார் |

**கற்றல் வளங்கள்**

- பாவாத மலை படம்
- அல்லாஹ் என எழுதப்பட்ட அட்டை
- ஆதம் (அலை) என எழுதப்பட்ட அட்டை
- சுவனம் - ஜன்னத்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

பின்வரும் வினாக்களை மாணவர்களிடம் வினவுங்கள்

- நான் யார்?
- எம்மை படைத்தவன் யார்?
- நாம் எதனால் படைக்கப்பட்டுள்ளோம்?
- நாம் எங்கிருந்து வந்துள்ளோம்?
- உலகில் முதன் முதலில் படைக்கப்பட்டவர் யார்?
- மாணவர்கள் முன்வைக்கும் விடைகளை கருத்தில் கொண்டு படிமுறை 2 ஐ நோக்கி நகருங்கள்.

படிமுறை 2

நாம் எல்லோரும் மனிதர்கள். இந்த உலகை அல்லாஹ் தான் படைத்துள்ளான் என்று கூறி அல்லாஹ் என எழுதப்பட்ட அட்டையை காட்டி வாசித்துக் காட்டுங்கள். அவன் முதலில் களி மண்ணால் மனிதனைப் படைத்தான். அப்படி உலகில் படைக்கப்பட்ட முதல் மனிதன் ஆதம் (அலை) ஆவார்கள். அவர் ஒரு நபியாகவும் இருந்தார். அவரது விலா எலும்பில் இருந்து அல்லாஹ் ஹவ்வா (அலை) அவர்களைப் படைத்தான். அவர்கள் சுவனத்தில் இன்பமாக வாழ்ந்தார்கள். இத்தகைய அடிப்படை விடயங்களை அறிமுகம் செய்யுங்கள்.

- மாணவர்கள் அறிந்து வைத்துள்ள விடயங்களை கூறவும் சந்தர்ப்பம் கொடுங்கள்.

படிமுறை 3

- பாவாத மலையின் படத்தைக் காண்பித்து அது குறித்த சில வரலாற்று தகவல்களை கலந்துரையாடுங்கள்.
- எம்மைப் போல உள்ள சகல மனிதர்களையும் நேசிக்க வேண்டும். மதிக்க வேண்டும். நாம் எல்லோரும் அல்லாஹ்வின் படைப்புகள். பரஸ்பரம் அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்
- செயற்பாடு 3 ஐ செய்ய வழிப்படுத்துங்கள்

**கணிப்பீடு**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| உலகில் தோன்றிய முதல் மனிதன் குறித்து கூறுவார். | 2.1.1 | ஆதம் (அலை) பற்றிய மூன்று விடயங்களைக் குறிப்பிடுவார் | ஆதம் (அலை) பற்றிய ஏதாவது விடயம் ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| முதல் மனிதன் படைக்கப்பட்டது குறித்து கூறுவார். | 2.2.1 | மனிதன் படைக்கப்பட்ட விதம் பற்றிய மூன்று விடயங்களைக் குறிப்பிடுவார் | மனிதன் படைக்கப்பட்ட விதம் குறித்துக் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 3 - இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்**

உலகில் தோன்றிய நபிமார்களுள் இறுதியாக வந்தவர் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் என்பதை ஏற்று அவருக்கு வழங்கப்பட்ட அல்குர்ஆனை விசுவாசித்து அவரது வாழ்க்கை முறைப்படி வாழ்ந்துகாட்ட வேண்டும் என்பது பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 3. இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் என்பதை அறிந்து அவரது முன்மாதிரிகளை வாழ்வில் பின்பற்றி நடப்பார். | நபி அவர்களின் சுயசரிதை | 3.1 இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்வு குறித்த பாடலை மையப்படுத்தி கருத்துரைப்பார். | 3.1.1 நபி அவர்களது வரலாற்றை சுருக்கமாக முன்வைப்பார். |
| | புனித மக்கா, புனித மதீனா, க.ஃபதுல்லாஹ், மஸ்ஜிதுன் நபவி | 3.2 நபியவர்கள் வாழ்ந்த மக்கா மற்றும் மதீனா தொடர்பாக கருத்துரைப்பார். | 3.2.1 க.ஃபதுல்லாஹ், மஸ்ஜிதுன் நபவி பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுவார். |
| | அல்குர்ஆன் அருளப்படுதல் | 3.3 அல் குர்ஆன் அருளப்பட்ட சம்பவத்தை முன்வைப்பார். | 3.3.1 இறுதிவேதம் அல்குர்ஆன் பற்றிக் குறிப்பிடுவார். |

**கற்றல் வளங்கள்**

- ஹிராக்குகையின் படம்
- அல்குர்ஆன் பிரதி
- மக்கா முகர்ரமா (க.ஃபாவின் படம் )
- மஸ்ஜிதுன் நபவியின் படம்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- மாணவர்களுக்கு தெரிந்த நபிமார்களின் பெயர்களை கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலே கூறப்பட்ட பள்ளிவாசல்களின் படங்களை தனித்தனியாக காண்பித்து அவை குறித்து கலந்துரையாடுங்கள்.
- மஸ்ஜிதுன் நபியின் படத்தை காண்பித்து பின்வரும் வினாக்களை முன்வையுங்கள்.

- இந்த பள்ளி எங்கு உள்ளது? இதன் பெயர் என்ன? இதற்கு யாராவது சென்றுள்ளீர்களா? ஏன் சென்றீர்கள்? இந்த மஸ்ஜித் எந்த நபியுடன் தொடர்புபட்டது? போன்ற வினாக்களை தொடுத்து விளக்கமளியுங்கள்.

படிமுறை 2

- ஹிராக்குகை , அல்குர் ஆன் பிரதியின் படத்தை காண்பித்து அவை என்ன என்று வினவுங்கள்.
- இவை எந்த நபியுடன் தொடர்புபட்ட விடயங்கள் என்றும் வினவுங்கள்.
- இது தான் ஹிராக்குகை. இங்கு தான் நபி(ஸல்) அவர்களுக்கு நாற்பதாவது வயதில் வைத்து அல்குர்ஆன் அருளப்பட்டது.
- அது அரபு மொழியில் உள்ளது போன்ற விடயங்களை எடுத்துக்கூறுங்கள்.
- நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தான் இறுதி நபி. அவரது போதனைகள் ஹதீஸ் எனப்படும். அவற்றை நாம் பின்பற்ற வேண்டும் என்பதை எடுத்துக் கூறுங்கள்.

படிமுறை 3

பாடல்

மக்கா புனித நகர் தனிலே

மா நபி முஹம்மத் பிறந்தாரே

அன்னை ஆமினா வயிற்றினிலே

பாலகனாக மலர்ந்தாரே

பிறந்திட முன்னே பூமியிலே

அப்துல்லாஹ்வை இழந்தாரே

மதீனா புனித நகர் தனிலே

புகழுடன் வாழ்வை முடித்தாரே

- மேற்படி பாடலை பொருத்தமான தாளத்துடன் பாடிக்காட்டுங்கள்.
- பாடல் குறிப்பிடும் விடயங்கள் குறித்து கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார் |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்வு குறித்த பாடலை மையப்படுத்தி கருத்துரைப்பார். | 3.1.1 | நபி அவர்களைப் பற்றி மூன்று விடயங்களைக் குறிப்பிடுவார். | நபி அவர்களைப் பற்றி ஒரு தகவலையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| நபியவர்கள் வாழ்ந்த மக்கா மற்றும் மதீனா தொடர்பாக கருத்துரைப்பார். | 3.2.1 | நபியவர்கள் வாழ்ந்த மக்கா மற்றும் மதீனா தொடர்பாக மூன்று விடயங்களைக் குறிப்பிடுவார். | நபியவர்கள் வாழ்ந்த மக்கா மற்றும் மதீனா தொடர்பாக பற்றி ஒரு தகவலையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| அல் குர்ஆன் அருளப்பட்ட சம்பவத்தை முன்வைப்பார். | | அல் குர்ஆன் அருளப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று விடயங்களை முன்வைப்பார். | குர்ஆன் அருளப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒரு விடயத்தையாவது கூறுவதற்கு இடர்ப்படுவார். |

எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு
பாடம் 4 - எமது பெருநாட்களைக் கொண்டாடுவோம்

முஸ்லிம்களாகிய எமக்கு இரண்டு விசேட பெருநாள்கள் உள்ளன என்பதை அறிந்து அவற்றை மகிழ்ச்சியுடன் கொண்டாடி இறைவனுக்கு நன்றியுள்ளவர்களாக மாற வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 4. பெருநாள் கொண்டாட்டங்களை அறிந்து அத்தினத்தில் சந்தோசத்தை வெளிப்படுத்துவார். | ஈதுல் பித்ர் - நோன்புப் பெருநாள்<br>ஈதுல் அழ்ஹா - ஹஜ் பெருநாள் | 4.1 முஸ்லிம்களின் பெருநாள் பற்றி குறிப்பிடுவார். | 4.1.1 பெருநாள் கொண்டாட்டத்தின் சந்தோசத்தை வெளிப்படுத்துவார். |
| | பெருநாள் விசேடங்கள் | 4.2 பெருநாள் விசேடங்கள் குறித்து கூறுவார். | 4.2.1 பெருநாளில் மேற்கொள்ளும் விசேட செயற்பாடுகளை விபரிப்பார். |

**கற்றல் வளங்கள்**

- புத்தாடைகள் ,
- விசேட உணவுப் பண்டங்களின் படங்கள் ,
- சிறுமிகள் கையில் மருதாணி இட்ட படங்கள் ,
- ஈதுல் பித்ர் - நோன்புப் பெருநாள் , ஈதுல் அழ்ஹா - ஹஜ் பெருநாள்

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- முன்னைய நாளில் உரிய அறிவித்தலை வழங்குங்கள்.
- விசேட தீன்பண்டங்களைத் தயாரிக்க பெற்றோரின் உதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- அன்றைய தினம் பெருநாள் புத்தாடைகளை அணிந்துவர அறிவுறுத்துங்கள்.
- மாணவிகளுக்கு கைகளில் மருதாணி இட்டுவர அனுமதி வழங்குங்கள்.
- மாணவர்களை வெளிச் சூழலுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- அன்றைய தினம் மேற்கொள்ளும் செயல்கள் குறித்தும் பெருநாள் தின விசேட தின்பண்டங்கள் குறித்தும் கலந்துரையாடுங்கள்.

படிமுறை 2

- பெருநாள் தொழுகைக்கு உரிய ஆயத்தங்களைச் செய்யுங்கள்.
- பொருத்தமான ஒருவரை (கதீப்) அழைத்து பெருநாள் தொழுகையை தொழுவித்துக் காட்டுங்கள்.
- பெருநாள் விசேட உரை ஒன்றை மாணவர்களுக்கு ஏற்ற வகையில் முன்வைக்க கதீபுக்கு சந்தர்ப்பம் கொடுங்கள்
- முஸாபஹா மற்றும் முஆனகா செய்ய சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பெருநாள் தின விசேடங்கள் குறித்து கலந்துரையாடி அத்தகைய வணக்கங்களை, வழக்காறுகளை செய்ய சந்தர்ப்பம் கொடுங்கள்.

படிமுறை 3

- இமாம் ஆற்றிய உரையை மையப்படுத்தி பெருநாள் தின விசேடங்கள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- ரமழான் நோன்பை முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும். அடுத்த நாள் நோன்புப்பெருநாள் கொண்டாடப்படும். இது ஈதுல் பித்ர் எனப்படும். ஷவ்வால் முதலாம் பிறையைப் பார்த்து ஈதுல் பித்ர் கொண்டாடப்படும். ஹஜ் மாதத்தில் வரும் பெருநாள் ஈதுல் அழ்ஹா எனப்படும். இது துல் ஹிஜ்ஜா மாதம் பத்தாம் நாள் கொண்டாடப்படும். ஹஜ் பெருநாளை அடுத்து வரும் மூன்று நாட்களும் அய்யாமுத் தஷ்ரீக் நாட்கள் எனப்படும். பெருநாள் தினம் உட்பட அந்நாட்களில் உழ்ஹியா எனப்படும் விசேட குர்பான் வழங்கப்படும்.
- இத்தகைய சிறப்புகள் குறித்து கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| முஸ்லிம்களின் பெருநாள் பற்றி குறிப்பிடுவார். | 4.1.1 | முஸ்லிம்களின் இரண்டு பெருநாள் பற்றியும் விபரமாகக் குறிப்பிடுவார். | முஸ்லிம்களின் ஒரு பெருநாள் பற்றியேனும் விபரமாகக் குறிப்பிட இடர்ப்படுவார். |
| பெருநாள் விசேடங்கள் குறித்து கூறுவார். | 4.2.1 | பெருநாள் விசேடங்கள் மூன்றைக் குறிப்பிடுவார். | பெருநாள் விசேடங்களில் ஒன்றையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

| | |
|---|---|
| **எண்ணக்கரு** | **- சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு** |
| **பாடம் 5** | **- எமது பாடசாலையை அழகுபடுத்துவோம்** |

சுத்தம் ஈமானைச் சார்ந்தது. எமது வாழ்வில் அதிகமான காலத்தையும் நேரத்தையும் கழிக்கும் இடமான வகுப்பறையின் சுத்தத்தில் எல்லா சந்தர்ப்பத்திலும் கவனம் செலுத்தி அழகுபடுத்த வேண்டும் என்பது பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 5. பாடசாலையின் அழகைப் பேணிப் பாதுகாத்து வருவார். | பாடசாலையின் சுத்தமும் நேர்த்தியும் | 5.1 பாடசாலை புனிதமாகவும் சுத்தமாகவும் இருக்க வேண்டிய இடம் என்பதை எடுத்துக் கூறுவார். | 5.1.1 பாடசாலையில் சுத்தம் பேணுவதன் அவசியத்தை குறிப்பிடுவார். |
| | அழகான பாடசாலை | 5.2 பாடசாலையின் அழகை தொடர்ந்தும் பேணி நடப்பார். | 5.2.1 பாடசாலையை அழகுபடுத்தும் முறைகளைக் கூறுவார். |

**கற்றல் வளங்கள்**

- பாடசாலையின் படம்
- அறிவுறுத்தல் அட்டைகள்
- பாடசாலையின் வழிகாட்டிப்படம் (map)

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- மாணவர்களை அயல் சூழலுக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- சூழலை அவதானிக்க விடுங்கள்.
- அவதானித்த விடயங்கள் குறித்து வினவுங்கள்.
- மாணவர்கள் முன்வைக்கும் பதில்களை வைத்து அழகான, சுத்தமான சூழல் மற்றும் அசுத்தமான சூழல் குறித்து கலந்துரையாடுங்கள்.
- பாடசாலையை எப்படி அழகுபடுத்தலாம் என்று வினவுங்கள்
- அழகான இயற்கையான இடங்களை பாதுகாக்க வழிப்படுத்துங்கள்.
- பாடசாலைச் சூழலை சிரமதானம் மூலம் சுத்தம் செய்து அழகுபடுத்த சந்தர்ப்பம் கொடுங்கள்.

படிமுறை 2

- பூங்கன்றுகள், பயனுள்ள மரக்கன்றுகளை கொண்டுவரச் சொல்லுங்கள்.
- பெற்றோரின் உதவியுடன் அவற்றை நடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- தினமும் நீரூற்றிப் பராமரிக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் செயற்பாடுகளை தொடர்ந்து அவதானித்து பூத்துக்காய்க்கும் மரங்களை உடைய மாணவர்களைப் பாராட்டுங்கள். சிறந்த குழுவுக்கு பாராட்டுக்களை வழங்குங்கள்.
- இணையத் தளத்தைப் பயன்படுத்தி மாணவர்களது செயற்பாடுகளை பதிவேற்றுங்கள் (முகநூல், வட்ஸ்அப்)

படிமுறை 3

- குப்பைகளை உரிய முறையில் அகற்றுவதற்கான அறிவுறுத்தல்களை தெளிவாகவும் கவர்ச்சியாகவும் காட்சிப்படுத்துங்கள்.
- பாடசாலையில் நாம் பாவிக்கும் கழிவறைகளின் சுத்தம் பேண வலியுறுத்துங்கள்.
- பாடசாலைச் சூழலை எல்லா வகையிலும் சுத்தம் செய்வதை பொறுப்புடன் நிறைவேற்ற வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| பாடசாலை புனிதமாகவும் சுத்தமாகவும் இருக்க வேண்டிய இடம் என்பதை எடுத்துக் கூறுவார் | 5.1.1 | பாடசாலையில் சுத்தம் பேணுகின்ற மூன்று விடயங்களை முன்வைப்பார். | பாடசாலையின் சுத்தம் பேணுகின்ற ஒரு விடயத்தையேனும் முன்வைக்க இடர்ப்படுவார். |
| பாடசாலையின் அழகை தொடர்ந்தும் பேணி நடப்பார். | 5.2.1 | பாடசாலையை தொடர்ந்தும் அழகுபடுத்தும் மூன்று விடயங்களை எடுத்துரைப்பார் | பாடசாலையை தொடர்ந்தும் அழகுபடுத்தும் ஒரு விடயத்தையேனும் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு

பாடம் 6 - நித்திரையின் ஒழுங்குகள்

எமக்கு ஓய்வாக அமையும் நித்திரை இறைவன் தந்த அருளாகும். நித்திரைக்கு ஒழுங்குகள் உள்ளன. அவற்றைப் பின்பற்றி உறங்கும் போது அது வணக்கமாக கருதப்படும். எனவே நித்திரையின் ஒழுங்குகளைப் பேணி உறங்க வேண்டும் என்பது இப்பாடம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 6. நித்திரையின் ஒழுங்கு முறைகளை பேணி தூங்குவார். | நித்திரையின் ஒழுங்கு | 6.1 நித்திரையின் ஒழுங்குகள் குறித்து குறிப்பிடுவார். | 6.1.1 நித்திரையின் ஒழுங்குகளை வரிசைப்படுத்துவார். |
| | சந்தர்ப்ப துஆக்கள். | 6.2 நித்திரை கொள்ளும் போது ஓத வேண்டிய துஆவை பொருளுடன் ஓதுவார். | 6.2.1 நித்திரை கொள்ளும் முன் உரிய துஆவை ஓதுவார். |

**கற்றல் வளங்கள்**

- நித்திரையின் ஒழுங்குங்குகள் எழுதப்பட்ட அட்டைகள்
- அவற்றின் படங்கள்
- நித்திரை கொள்ளு முன் ஓத வேண்டிய துஆ எழுதப்பட்ட அட்டை

اَللّٰهُمَّ بِاسْمِكَ أَمُوْتُ وَأَحْيَا

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- நித்திரை கொள்வது ஏன்? எப்போது? எப்படி? எவ்வளவு நேரம்? என மாணவர்களிடம் வினவுங்கள்
- உடல் , உள ஆரோக்கியத்துக்கு நித்திரையின் அவசியத்தை எடுத்துக் கூறுங்கள்.
- முறையாக தூங்குவது இபாதத் என்று கூறுங்கள்.
- உரிய முறைப்படி தூங்குவதால் போதிய ஓய்வு கிடைக்கும் என்று கூறுங்கள்.

- நிம்மதியாக தூங்குவதால் அடுத்த நாள் உற்சாகமாக இயங்கலாம் என்பதையும் வலியுறுத்துங்கள்.
- அதிக நேரம் விழித்திருந்து பிந்திய இரவில் உறங்குவது ஆபத்தானது என்பதை வலியுறுத்துங்கள்.
- இரவில் கையடக்க தொலைபேசி பார்ப்பது, தொலைக்காட்சியின் முன்னால் நீண்ட நேரம் இருந்து நேரத்தை வீணடிப்பது பாவம் என வலியுறுத்துங்கள்.

படிமுறை 2

- நித்திரையின் ஒழுங்குகள் குறித்து மாணவர்களிடம் வினவுங்கள்.
- கீழ் வரும் ஒழுங்குகளை முன் வையுங்கள்.
- பல் துலக்க வேண்டும், கழிவறைக்கு சென்று சுத்தமாக வேண்டும், வுழு செய்ய வேண்டும், தலையணை மற்றும் விரிப்பு என்பவற்றை மூன்று முறை உதறிக் கொள்ள வேண்டும், வலது பக்கம் சாய்ந்து கன்னத்தில் கை வைத்து உறங்க வேண்டும்.
- மேற்படி ஒழுங்குகளை பின்பற்றி தூங்கும் மாணவர்களை முன்னே வர வைத்து அவற்றை கூற வழிப்படுத்துங்கள்.
- அவர்களைப் பாராட்டுங்கள்.
- தூங்கும் ஒழுகுங்குகள் எழுதப்பட்ட அட்டையைக் காண்பித்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அவற்றை ஒழுங்கு முறைப்படி கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்

படிமுறை 3

- தூங்கும் போது ஓத வேண்டிய துஆவை ஓதிக்காண்பித்து அதன் பொருளையும் கூறுங்கள்
- அதனை மனனமிட வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார் |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| நித்திரையின் ஒழுங்குகள் குறித்து குறிப்பிடுவார். | 6.1.1 | நித்திரையின் ஒழுங்குகளை வரிசைப்படுத்துவார். | நித்திரையின் ஒழுங்குகளை வரிசைப்படுத்திக் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| நித்திரை கொள்ளும் போது ஓத வேண்டிய துஆவை பொருளுடன் ஓதுவார். | 6.2.1 | நித்திரை கொள்ளும் முன் உரிய துஆவை ஓதுவார். | நித்திரை கொள்ளும் முன் உரிய துஆவை ஓதுவதற்கு இடர்ப்படுவார். |

**எண்ணக்கரு - சிரத்தை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு**
**பாடம் 7 - மூத்தோரை மதிப்போம்**

வயதிலும் அனுபவத்திலும் கூடியவர்கள் மூத்தவர்களாகக் கருதப்படுவர். அவர்களை எப்போதும் நாம் மதிக்க வேண்டும். அவர்களின் உபதேசங்களை எடுத்து நடக்க வேண்டும். அவர்களுக்கு எம்மாலான எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும் என்பது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறு | விடய உள்ளடக்கம் | செயலடைவு நியமம் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 7. எல்லா சந்தர்ப்பங்களிலும் மூத்தவர்களுக்கு அன்புடன் மரியாதை செய்வார். | முதியோரை நேசித்தல். | 7.1 மூத்தவர்களை நேசிக்க வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிடுவார். | 7.1.1 மூத்தவர்களுக்கு அன்பு காட்டிய சந்தர்ப்பங்களை முன்வைப்பார். |
| | மூத்தவர்களுக்கு மரியாதை செய்தல். | 7.2 மூத்தவர்களை மரியாதை செய்ய வேண்டிய அவசியத்தை விபரிப்பார். | 7.2.1 மூத்தவர்களுக்கு மரியாதை செய்த சந்தர்ப்பங்களை முன்வைப்பார். |

**கற்றல் வளங்கள்.**

- மூத்தவர்களுக்கு அன்புடன் மரியாதை செய்யும் படங்கள்.
- மூத்தவர்களுக்கு மரியாதை செய்வது தொடர்பான வரலாற்றுச் சம்பவங்கள்.
- இவை தொடர்பான ஒரு சில ஹதீஸ்கள்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறை**

**படிமுறை 1**

- பிள்ளைகளின் தாத்தா, பாட்டி மற்றும் பெற்றோர் குறித்தும் அவர்களுடைய வயது குறித்தும் வினவுங்கள்.
- வீட்டிலுள்ள ஏனைய மூத்தவர்கள் குறித்து வினவுங்கள்.
- அண்டை அயலிலுள்ள நோயாளர்கள் குறித்து வினவுங்கள்.
- ஆசிரியர்கள், ஆலிம்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மாணவர் தலைவர்களுடன் கலந்துரையாடுங்கள்
- மேலே கூறப்பட்டவர்கள் எம்மை விடவும் வயதில் கூடியவர்கள். அவர்களை நாம் எப்போதும் மரியாதையாக நடாத்த வேண்டும்.

- அவர்களுக்கு பட்டப் பெயர் சூட்டக் கூடாது. பரிகாசம் செய்யக் கூடாது என்பதனை வலியுறுத்துங்கள்.
- அவர்கள் சொல்கின்ற உபதேசங்களை கேட்டு நடக்க வேண்டும். மூத்தவர்களுக்கு மரியாதை செய்யாதவன் என்னைச் சார்ந்தவன் அல்ல என்று நபியவர்கள் கூறிய ஹதீஸை நினைவூட்டி கலந்துரையாடுங்கள்.

படிமுறை 2

- வீட்டிலுள்ள வயது முதிர்ந்த பாட்டன் பாட்டிகள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- அவர்களுக்கு பணிவிடை செய்த அனுபவங்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வீட்டில் வயது முதிர்ந்த நோயாளிகள் இருப்பின் அத்தகைய நபர்களுக்கு உதவி செய்த மாணவர்கள் குறித்து வினவி, அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளியுங்கள்.
- இது போல மூத்தவர்களுக்கு அன்புகாட்டி மரியாதை செய்த வேறுபட்ட அனுபவங்களை நீங்களும் முன்வைத்து மாணவர்களுக்கும் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மூத்தவர்களுக்கு மரியாதை செய்வதால் அவர்களின் அன்பு கிடைக்கும் அவ்வாறே இறைவனிடம் உயர்ந்த கூலியும் கிடைக்கும் என்பதனை வலியுறுத்தி எதிர்காலங்களில் அத்தகையை சந்தர்ப்பங்கள் கிடைத்தால் தவற விடக்கூடாது என்பதனையும் எடுத்துரையுங்கள்.
- நபி அவர்கள் மூதாட்டிக்கு உதவிய நிகழ்வை கூறி நடித்துக்காட்ட வாய்ப்பளியுங்கள்.
- செயற்பாடு 2 ஐ செய்விக்க வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | **பாண்டித்திற்குத் தொலைவிலுள்ளார்** |
|---|---|---|---|
| | | **நிலை 2** | **நிலை 1** |
| மூத்தவர்களை நேசிக்க வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிடுவார். | 7.1.1 | மூத்தவர்களுக்கு அன்பு காட்டும் முறைகள் மூன்றைக் குறிப்பிடுவார். | மூத்தவர்களுக்கு அன்பு காட்டும் முறை ஒன்றைக் கூறுவதற்கு இடர்ப்படுவார். |
| மூத்தவர்களை மரியாதை செய்ய வேண்டிய அவசியத்தை விபரிப்பார். | 7.2.1 | மூத்தவர்களுக்கு மரியாதை செய்த சந்தர்ப்பங்கள் மூன்றைக் குறிப்பிடுவார். | மூத்தவர்களுக்கு மரியாதை செய்த சந்தர்ப்பம் ஒன்றைக் கூறுவதற்கு இடர்ப்படுவார். |

ඉස්ලාම් ධර්මය ගුරු මාර්ගෝපදේශය (දෙ)
1 ශ්‍රේණිය

இஸ்லாம் ஆசிரியர் வழிகாட்டி (த)
தரம் 1